..056

கடவுள் துணை.

# ஆராய்ச்சி தீபம்

## சுயமரியாதைக் கண்டனம்

ஆக்கியோன்:
திருச்சி மர வியாபாரம்
சூ. சவரிமுத்துப் பிள்ளை அவர்கள்

திருச்சிராப்பள்ளி:
ஜேகம் அண்டு கோ., டாட்ஸன் பிரஸில்
அச்சிடப்பெற்றது.

—

1934 [விலை, அணா 2

R 3, 4
N34
68214

கடவுள் துணை.

# ஆராய்ச்சி தீபம்

## சுயமரியாதைக் கண்டனம்

ஆக்கியோன்:
திருச்சி மர வியாபாரம்
சூ. சவரிமுத்துப் பிள்ளை அவர்கள்

ஜெகம் அண் கோ.,
தெப்பக்குளம்,
திருச்சி.

1934

[விலை அணா 2

# அட்டவணை.


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முகவுரை | | |
| 2. | முன்னுரை | ... | 1 |
| 3. | கடவுள் | ... | 2 |
| 4. | உலகம் இயற்கையா | ... | 6 |
| ,, | 1வது சங்கை உலகம் தானுக உண்டானதோ | ... | 7 |
| ,, | 2வது சங்கை எவரால் உண்டாக்கப்பட்டதோ | ... | 10 |
| ,, | 3வது சங்கை எந்த நிமித்தமாய் உண்டாக்கப்பட்டதோ | ... | 11 |
| 5. | உலக சிருஷ்டிப்பு வெளியான விவரம் | ... | 13 |
| 6. | கிறீஸ்த்துபிரான் போதனை சமதர்ம பயன் | ... | 15 |
| 7. | சமத்துவம் | ... | 18 |
| 8. | சுயமரியாதை | ... | 27 |
| 9. | ரஷியா சதி | ... | 28 |
| 10. | பெண்கள் சுவாதீனம் | ... | 32 |
| 11. | தீண்டாமை | ... | 35 |
| 12. | குருத்துவேஷம் | ... | 39 |
| 13. | கர்பத்தடை | ... | 49 |
| 14. | சுயமரியாதைக்காரரின் ஏய்ப்பு | ... | 57 |
| 15. | முடிவுரை | ... | 61 |

# முகவுரை.

---

நாடு, நகரம் அனைத்தும் பழமையை ஒழித்து, புதுமையைப் புகுத்த கிரமமற்ற புரட்சி இருள் சூழ்ந்து கிடக்கிறது. இவ்விருளை நீந்திச் செல்ல, பகுத்தறிவென்னும் தீபிகை ஒவ்வொரு மனுவிடமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வமைப்பை உணராது, மனுக்குலம் தயங்கி நிற்கிறது. அத்தயக்கம் தெளிவுறுமாறு இச் சிறிய புத்தகத்தை இயற்றியிருக்கிறோம். இதிலுள்ளவை, புரட்சிக்காரரால் புகுத்த விருக்கும் கிரமமற்ற கோட்பாட்டை பகுத்தறிவென்னும் தீபிகையினால் வகுத்தறிந்தொதுக்கிவைக்கும் என்று நம்புகிறோம்.

---

# முன்னுரை

விஞ்ஞானமென்பது அறிவின் ஆராய்ச்சி என்று சொல்லப்படும். இவ்வாராய்ச்சியின் முறையே, யாவரும் பிரமிக்கக்கூடிய விதமாய், சூரிய சந்திர, கிரகம் தாரகை முதலிய விண்மண்டல ஆராய்ச்சிகளும், ஆழம் அந்தராழ, முதலிய ஆராய்ச்சிகளும் பிரசித்தமாவதோடு கடிகாரம், ரெயில், ட்ரும், டெலிபோன் தந்தி, ஆகாயகப்பல், கம்பியில்லாத் தந்தி, மின்சாரசக்தி, போனகிராப், ஆடல் பாடல்களோடு நடிக்கக்கூடிய மாயா சினிமா முதலியவைகளும், அறிவின் ஆராய்ச்சி வழியாய் நிருமித்து நிமித்திகரித்து பிரசித்தஞ் செய்யப்பட்டு, பிரக்கியாதிபெற்று மேலும் மேலும் விருத்தியாகி வருகின்றன. இவ்வரிய முறையே, விஞ்ஞானமென்று சொல்லப்படும். இங்ஙனம் நிமித்திகரித்த நிபுணர்களைப்போல பிரக்கியாதிபெற அபிலாசையுடையோர் சிலர்,

> கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
> தானுமதுவாகப் பாவித்து—தானுந்தன்
> பொல்லாச்சிறகை விரித்தாடினுற் போலுமே
> கல்லாதான் கற்ற கவி
>
> என ஒளவை

அம்மை அறைந்ததற்கொப்ப, தங்களை விஞ்ஞானிகளெனப் பறைசாற்றிக்கொண்டு, மெய்ஞ்ஞானங்களை அஞ்ஞானமாக்கி விஞ்ஞானமெனக் கூறுகிறார்கள். இவர்கள் கூறுவன முற்றும் தலைகீழானவாக யிருப்பதால், இவை ஞாயத்திற்கும் புத்திக்கும் அனுபவத்திற்கும் கிரமமாயுள்ளனவா என்பதை யோசித்தறிவோம்.

## கடவுள்

சர்வ சக்தியும் சர்வ வல்லமையும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்டதான கடவுள் என்னப்பட்டவர், எங்கும் வியாபித்திருக்கிறுரென்பது பிரத்தியக்ஷமாம். இதைப்பற்றி "தவறிவிழுவோருக்கு ஊன்றுகோல்" என்னும் புஸ்தகத்தில், கடவுள் உண்டென்றும் அவர் மனிதர் சரீர கண்களுக்கு புலப்படக்கூடிய கிரமமில்லை யென்றும், அவரிருப்பதை மனிதர் உணரும்படி அந்தரங்கமாயும் வெளியரங்கமாயும் தோற்றுவித்துக்கொண்டே யிருக்கிறுரென்றும், மறுக்க முடியாத பிரத்தியக்ஷமான ஞாயங்களைக் கொண்டு உருபிகரித்திருக்கிறேம். இத்தனை உந்நத மகத்துவமுடைய கடவுளை இல்லை என்றும், அவர் இருப்பரேல் அவரைப்பார்த்தது யார் என்றும், தற்போது சொல்லித் திரியும் மேதாவிகளை இவர்கள்தான் முதன்மையானவர்களென சனசமூகம் கருதப்படாது. உடம்பு வளையாது ஊர்ச் சொத்தைத் தின்று கொழுப்பேறிய சோம்பேறிகளெல்லாரும், கடவுளில்லை என்று புலம்பி நாசமாவதும், பின்னும் அவ்வித அண்ணுத்தைகள் முளைத்து அழிவதும், இவ்விதமே காலா காலமாய் ஒவ்வொரு கூட்டங்கள் கிளம்புவதும் அழிவதும் சகஜமாகவே நடந்து வருவதே தவிர, ஓட்டைக் குடத்தில் தண்ணீர் சேந்தின மாதிரி இவர்கள் கொள்கை கரை சேருவதில்லை. உலகத்திலுள்ள இருனூறு கோடி ஜனத்தொகையில், கடவுளில்லை என தாண்டவமாடுபவர் பதினுயிரத்தில் ஒரு நரையானிருக்கலாமோ என்பது சந்தேகம். மிதமிஞ்சிய மூர்க்கத்தனத்தால், இவர்கள் உதடுமட்டும் கடவுளில்லை என்று பறையடித்தாலும், அவர்கள் உள்ளத்தில் தன்னையும் உலகத்தையும் உலகத்திலுள்ள சர்வத்தையும் ஆக்கியும் பரிபாலித்தும்

அளித்தும் வருகிற வல்லபரனிருக்கிருரென்னும் உணர்ச்சி நீங்கிப்போகா. உதாரணமாக, கடவுளில்லை என்று தீவிர மான பிரச்சாரஞ்செய்து கொண்டுவந்த பெரிய நாஸ்தி கஞன "வோல் நே" என்பவன் கப்பல் பிரயாணஞ் செய்தபோது, ஆபத்தான புயல்காற்றில் அகப்பட்டு திடுக் கிட்ட சமயம், இவன் அந்தரங்கமாய் வைத்திருந்த ஜெப மாலையை எடுத்து பக்தியோடு ஜெபித்துக்கொண்டிருந் தானும்; கூட இருந்தவர்கள் அதிசயப்பட்டு கேட்டதற்கு கடவுளில்லை என்று சொல்லுகிற இடம் வேறு, ஆபத் தான சமயத்து அவர் உதவியைத்தேடுகிற இடம் வேறு என்று கூறினனும். இதைக்கொண்டே, கடவுளில்லை எனக் கூறுபவர்கள், குறவர்களை யொத்த பாஷாண்டி களெனவே நன்கு விளங்குகிறது. இவ்வித பாஷாண்டி கள் விஷயத்தைப்பற்றி, மேதாவிகளாகிய நிபுணர்கள் சொல்லியிருப்ப தென்னவென்றல்:—இவர்களை மரத் தோடு சேர்த்து இறுகக்கட்டி இரத்தம் பீறிட்டோடும்படி அடித்தால், ஐயோவென்றும் கடவுளே என்றும், இவர் களே அபயமிடுவார்கள்; அப்போது யாவருமறிய இவர் கள் அந்தரங்க கொள்கை வெளியாகி விடுமென்று சொல்லு கிறர்கள்.

மெய்யாகவே கடவுள் உண்டா, இல்லையா, என்னும் சந்தேகம் ஒருவனுக்குத்தோன்றி உழன்று தவிப்பானுகில், அவன் கட்டுச்சாதம் கையில் கொண்டு தேடிப்பார்க்க எங்கும் போக வேண்டிய அவசியமே இல்லை. மனிதன் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டானென்றும், அவ்வித சிருஷ்டிப்பு அவர் சாயலாகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற தென்றும், வேதமே சாக்ஷியாயிருக்கிறது. அதை சோதித்தறியவேணுமானல், கடவுள் சாயலாய் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிருனென்னும் வார்த்தையிலேயே

வெட்டவெளியாகி விட்டது. எப்படி எனில், கடவுளவர் அக்ஷயம், சூக்ஷமம் இலகு, பிரகாசம் என இந் நான்கும் அமைந்த அரூபி; இவ்வளவில், அக்ஷயம் சூக்ஷ்மம் இலகு பிரகாசம் எனக்கொண்ட ஆன்மா என்னும் நாமம் சூட்டப்பட்ட ஒரு அரூபியை உண்டாக்கி, அதை சரீரமாகிய கூட்டுக்குள்ளிருத்தி, இவ்விரண்டையும் ஜீவனென்னும் கயற்றால் பிணைத்து, மனிதனாக அமைத்திருக்கிறார். இவ்வுந்த வகையையே, ஞானிகளும் சித்தர்களும் கடவுளுக்கும் மனிதனுக்கும் "திரைமறைவாம்" என்று சொல்லுகிறார்கள். அதாவது, மனித சரீரமானது திரையையொப்ப அரூபிக்கடவுளுக்கும், அரூபி ஆத்துமத்திற்கும் நடுவில் திரை மறைவாயிருப்பதாக ஆயிரக்கணக்கான சாஸ்திரங்களில் சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது. மண்ணால் உண்டுபண்ணப்பட்ட சரீர கண்களுக்கு, அரூபியாகிய கடவுள் தோன்றப்பட மாட்டார். ஏனெனில், கடவுள் ஜோதிமயமென்று ஞானிகள் சொல்லி வருகிறபடி, அப்பிர்மாண்ட ஜோதி, சரீர கண்களுக்கு தோற்றப்படுமானால், கண்ணொழுகிப் போகுமென்பது சத்தியம். எப்படி எனில், வானத்திலொளிரும் மின்னலைப் பார்த்தகண் ஒழுகியும் கெட்டும் போயிருப்பதை நாம் பார்த்தும் கேட்டுமிருக்க, அம்மின்னலைவிட கோடிபங்குக்குமேல் அதிகமாகிய ஜோதியை பார்க்கும் கண்ணும் மூளையும் ஜீவனும் நிலைக்காதென்பது வெளிப்படையானதால், அரூபியாகிய கடவுள் அழிந்து போகிற சரீர கண்களுக்கு தோற்றப்படாரென்பது கிரமமும் கிருபையுமாம். மேலும், அழியக்கூடியவற்றிற்கு அழியக்கூடியதே தோற்றப்படுமென்பது கிரமமானதால், இம்முறையிலேயே மனிதனோடேயே கூடிவாழும் ஜீவன் நமக்குத் தோற்றப்படாதிருந்தும், ஜீவன் உண்டென்னும் ஞாயத்தை நாம் ஒத்துக்கொள்

வதுபோல, அச்சீவனையும், ஆகிற அழிகிற உலகப்பொருள் களையும் உண்டாக்கிறவரும் அழிக்கிறவருமாகிய கடவுள் உண்டென்று ஒத்துக்கொள்ள ஆக்ஷேபமென்ன? உன் சிற்றுடலுக்குள் உன்னோடு ஒருமித்து வாழும் அரூபியா கிய ஜீவனை பார்க்கக்கூடிய யோக்கியதை உனக்கு அமை யாதபோது, மூவுலங்களையும் கடந்து செல்வோனாகிய அரூபிக்கடவுளைப் பார்க்கக்கூடிய யோக்கியதை எப்படி உனக்கு ஏற்படும்?

இன்னும், கடவுளை யாவரும் பார்க்காதபோது கடவு ளுண்டென்று நம்புவது குருட்டு நம்பிக்கையும் மூடப் பக்தியுமென்று, மூடக்கொள்கையையுடைய சுயமரியாதைக் காரர்கள் தற்போது போதித்து வருகிறார்கள். இவர்களை நாமும் ஒரு கேள்வி கேட்கிறோம். இவர்கள் தாயார் இவர் களைப்பெற்றதை இவர்கள் பார்த்தார்களா, என்று கேட்கி றோம். பார்க்காதபோது, பெற்ற தாயென்று கொண் டாடுவது குருட்டு நம்பிக்கையும் மூடப்புத்தியும் தானே என்று கேட்கிறோம். அந்தத் தாய்க்கு தகனக்கிரிகை செய்வதும் காடாத்து கருமாதி செய்வதும், அமாவாசை விரதம் பிடிப்பதும், தெவசம், சிரார்த்தம் முதலி யவை நடத்திவருவதும் இன்னும் உங்களுக்குள் இல் லையா என்று கேட்கிறோம். பெற்றதை பார்க்காத போது தாயென்று கண்டுகொண்ட விதம் எப்படியோ அதுபோலவே அனேகமான ஞானிகள் வழியாகவும், பக் தர்கள் வாயிலாகவும் காலாகாலமாய் கடவுளவர் பற்பல முறைகளை அனுசரித்து ஆசரித்து நடக்கவேணுமாய் ஜன சமூகத்திற்கு அவ்வப்போது அறிவுறுத்திவந்த வல்லபங்க ளாலும், அதை வெளிப்படுத்திவந்த ஞானிகள் பக்தர்கள் வாயிலாகவும் கடவுள் உண்டென்னும், நம்பிக்கை காலா

காலமாய் அனுஷ்டானத்திலிருந்து வந்திருக்கும் முறையே, கடவுளுண்டென்பது அசைக்கக்கூடாத ஞாயமாகும்.

இன்னும் கடவுளிருப்பதை ஒத்துக்கொள்ளேனென சலஞ்சாதிப்பவர்களும், கடவுளிருப்பதை ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு வழியுமுண்டு. அது யாதெனில், அவரவர்கள் மனத்துள் உதிக்கிறதும், விதிக்கிறதும், ஒடுங்குகிறதுமாகிய மூவகையில் உதிக்குமிடத்தையும், ஒடுங்குமிடத்தையும் அறிந்துகொண்டாலும், அல்லது விதிக்குமிடத்து உற்றுக் கேட்டாலும், கடவுள் உண்டென்பதை ஆக்ஷேபியாமல் வலிய ஒத்துக்கொள்வார்களென்பது திண்ணம். இவ்வகையும் அனுஷ்டிக்கத் திறமையற்றவர்கள் பெரியார் போதகத்திற்கமைந்து கடவுள் உண்டென்று கொள்வதே கிரமமாகும்.

இன்னும சர்வ சக்தியும், சர்வ வல்லமையும் வாய்ந்த கடவுளவர் தம்மை மனித கண்ணுக்குத் தோற்றும்படி காட்டக்கூடிய கிரமமில்லாதிருந்தாலும் கடவுளுண்டென்னும் கொள்கை உதயமாகிக்கொண்டிருக்கும்படி அந்தரங்கமாயும், வெளியரங்கமாயும் தோற்றுவித்துக்கொண்டிருக்கும் விவரத்தை “தவறி விழுவோருக்கு ஊன்றுகோல்” என்னும் புத்தகத்தில் 24வது பக்கம் முதல் 29வது பக்கம் வரை “தேவ வெளிப்படுத்தல்” என்னும் தலையங்கத்தின்கீழ் விபரமாய் எழுதித் தந்திருப்பதால் அதை வாசித்துத் தெளிந்துகொள்க.

## உலகம் இயற்கையா ?

சத்திய சுவாப சுரூபியான ஏககடவுளின் நிர்ணயத்தைச் சொல்லிக் காண்பித்ததின் பின் அவர் உலகம் சிருஷ்டித்த மேன்மையைச் சொல்லிக் காட்டுவது முறைமையாம். ஏனெனில் பத்து மாதம் தாயுதரத்தில் கருக்கொண்டிருந்த

அனந்தை தாயை அறியாமலிருந்து பிரசவிக்கப்பட்டபின் தன் தாயையும், தந்தையையும் அறிந்து அவர்களை ஆசரிப்பதுபோல, இவ்வுலோக விஸ்தாரமென்கிற குக்ஷிக்குள்ளே வசித்திருந்து, தங்களை உண்டாக்கினவர் ஒருவர் உண்டென்று அறியாமலிருக்கிற மானிடர் இந்த உலக உற்பத்தி பிரத்தியக்ஷமான காரணத்தால் சமஸ்தரும் தங்களுடைய ஆதித் தகப்பனும், சுய விராயனுமான தேவாதிதேவனை அறிந்து, ஆசரித்துப், பணிசெய்து, தங்களுக்குரிய சம்பாவனையைப் பெறக்கூடியவர்களாயிருக்கிறார்கள். ஆனதினால் இப்படிப்பட்ட உலக உற்பத்தியைப் பற்றித் தெரிவிக்கும்போது அந்த உலோகம்,

1. தானாக உண்டானதோ ?
2. எவரால் உண்டாக்கப்பட்டதோ ?
3. எந்த நிமித்தமாய் உண்டாக்கப்பட்டதோ ?

என்கிற இம் மூன்று சங்கைகளாக வகுத்து, ஆராய்ந்தறியவேண்டியது அவசியமாம்.

## 1வது சங்கை.

மனுஷர் உண்டாவதற்கு முந்தியே உலோகம் உண்டாயிருக்க, அது உண்டாக்கப்பட்டதை கண்டவன் ஒருவனும் இல்லாதபோது, அது இயற்கையாய் உண்டானதென்றும், ஒருவனால் உண்டாக்கப்பட்டதென்றும் சொல்லுவதெப்படி ? பூலோக நிமித்தியங்களைக் காணத்தக்கதாக நமக்கு புறக்கண், அகக்கண் என்கிற இருவித திருஷ்டிகளிருக்கிறபடியினாலே, புறக்கண் என்கிற சரீர கண்ணால் பார்க்க முடியாதவற்றையெல்லாம், அகக்கண் என்கிற புத்திக் கிரகணத்தால் கண்டுபிடித்துக்கொள்ளவேண்டியது. அது எப்படியென்றால், தன்னிலே தானாய் உண்டாகிற பொருள் எண்ணிக்கை, அளவு, பிரமாணத்திற்குள் அடங்

காமல் மேலும் மேலும் விசிரிம்பித்தே நிற்குமாதலால் அது தானாக உண்டானதென்றும், யாதொருவரால் உண்டாக்கப்பட்ட பொருள்களெல்லாம் அவற்றை உண்டாக்கினவன் தனது சத்திப் பிரியம், பிரமாண அளவாய் செய்கிறதினால், அவை அளவு பிரமாணத்திற்குள் அடங்கினவைகளாயிருப்பதினாலே, அவை ஒருவனால் உண்டாக்கப்பட்டனவென்றும் அறிந்துகொள்ளவேண்டியது. இது எப்படி என்றால் தானே ஊறுகிற ஊற்றுத் தண்ணீர் அளவு, பிரமாண மில்லாமல் ஊறி ஓடிக்கொண்டேயிருக்கும். குடத்திலாவது, குளத்திலாவது நிறைத்த தண்ணீர் அதைக் கட்டுப்படுத்தி நிறைத்தவனுடைய எண்ணத்திற்குள் அடங்கினதாய் இருக்கும். கடிகாரத்தை உண்டாக்கினவன் எண்ணத்திற்குள் அடங்கி கடிகாரம் நடப்பதைப்போல, அளவுள்ள பொருள் யாதொருவனால் உண்டாக்கப்பட்டதென்றும், அளவு பிரமாணமில்லாத பொருள் தானாகவே உண்டானதென்றும் அறியலாம். அதுபோலவே வானமும், பூமியும் அவற்றுள் அடங்கிய சகல பொருள்களும், அளவு, பிரமாணம், நிறை, நிச்சயத்தோடிருப்பதால் சூரியனுதிக்கிற வேளையும், அஸ்தமிக்கிற வேளையும் தப்பாமல் சந்திரன் நிறைகிற, தேய்கிற, சுக்கில, கிருஷ்ணபக்ஷ நாள் தப்பாமலும், கிரகம், தாரகை, ராசிகள் மாறுகிற, பாய்கிற கடிகை, முகூர்த்தக் கணக்குகள் தப்பாமலும், வாடை, கோடை, தென்றல், கொன்றல் காற்றுகள் வீசி அடிக்கிற நேரங்கள் தப்பாமலும், வருஷம், வசந்தம், குளிர், வேனில் என்று வருகிற காலங்கள் தப்பாமலும் நடந்துவருவதால் யாதொருவனால் அளவிட்டு நிரூபிக்கப்பட்டதல்லாமல் தன்னில் தானாகவே உண்டானதல்லவென்று தெளிந்துகொள்ள வேண்டியது.

இன்னும், பரமானந்த வானம், ஸ்படிக வானம், சோமசூரிய கிரகதாரகை வானம் முதலான விண் மண்டல சிருஷ்டிப்பும், வாய்வுலோகம், மனுலோகம், நரகலோகம் முதலான உலக சிருஷ்டிப்பும், ஆழம், அந்தராழம், பாதாளம் முதலான ஆழ சிருஷ்டிப்பும், திரிபுவன, திரிகால சிருஷ்டிப்பும், சதுர்பூதிய சிருஷ்டிப்பும் பஞ்சேந்திரிய, பஞ்சகாமிய, பஞ்சகல்யாண சிருஷ்டிப்பும், சஷ்ட வுறுப்பங்கங்கள், சப்த, பிர்ம, அஷ்டகோணம் முதலியவைகளாலே ஜோடிக்கப்பட்ட அரண்மனையைப்போல் உலகத்தை இசைத்துப் பொருதி யிருப்பதினுலே உலகம் ஒருவரால் உண்டாக்கப் பட்டதென அறிந்துகொள்ள வேண்டியது.

இவ்விதம் உண்டாக்கப்பட்ட உலகத்தை உண்டுபண்ணும்போது அதைப் பார்த்தது யார்? பார்க்காததை நம்புவது, மூடப்புத்தியும், குருட்டு நம்பிக்கையுமென்கிறுர்கள். இந்தமூடப்புத்தியும,குருட்டுநம்பிக்கையும் தெளிவுபட உவமானங்களேயும் எடுத்துக்காட்டுகிறுர்களாம். அவை யாவை எனில், ஒரு நாற்காலியை எடுத்துக்கொள்வோம் அல்லது ஒரு கடிகாரத்தை எத்துக்கொள்வோம். அவைகளேச் செய்தவர்களே நாம் கண்ணுல் பார்க்கிறோம்; அதனுல் அவை ஒருவரால் உண்டாக்கப்பட்டவையென நம்புகிறோம். அதுபோல, கடவுள் உலகத்தை உண்டாக்கினதை பார்த்தது யார்? பார்க்காததை நம்புவது மூடப்புத்தியும் குருட்டு நம்பிக்கையுமென்கிறுர்கள். இது எத்தனே நிதானப் புத்தியுடையவர்கள் கேள்வி என்பதை ஆராய்ச்சி செய்து பாருங்கள். நாற்காலி கடிகாரம் செய்ததை, இவர்கள் பார்த்ததினுல், அவற்றை ஒரு மனிதன் செய்தானென்று ஒத்துக்கொள்கிறுர்கள். அப்படி செய்ததை இவர்கள் பாராமலே இருந்து, அவற்றை நூதனமாய்க் கண்டால், இவையும் இயற்கையாய் உண்டானவையென்று சலஞ்

சாதிக்காமல் ஒருவரால் உண்டாக்கப்பட்டனவென்று ஒத்துக்கொள்வார்களா என்று யோசித்துப்பாருங்கள். இன்னும், நமது மனிதர் வாசமற்ற விரிந்த கானகத்தில் புதிதாக ஒரு அரண்மனையை கட்டுவித்து, அதில் பிரகாசிக்க வேண்டிய தீபங்களையும் போட்டு, சித்திரவிசித்திரமான கொடி துவசங்களால் அலங்கரித்து வைத்து, வந்துவிடுவோமேயாகில், அதை அதுவரையில் பாராத காட்டு மனிதர்கள் திடீரென வந்து அதைப்பார்த்தால் அது மற்ற புல் பூண்டு கொடி செடி மரங்களைப்போல. தானாக முளைத்துக் காய்த்துப் பழுத்திருக்கிறதென யூகிக்காமல், வேறென்ன. யூகிப்பார்களென யோசித்துப் பாருங்கள். அக்காட்டுமிராண்டியையொத்த இவர்கள் கடவுள் உலகத்தை உண்டுபண்ணும்போது நேரில் பார்க்கவில்லை என்பதின் காரணமே, மூளை பிறண்டு அறிவை இழந்து, உலகம் இயற்கையாய் உண்டானதென பிதற்றித் திரிகிறார்களென அறிந்துகொள்ளுங்கள்.

## 2-ம் சங்கையாவது.

யாரோ ஒருவரால் உலகம் உண்டாக்கப்பட்டது மெய்யென்று தெளிவாயிருக்க, அது எவரால் உண்டாக்கப்பட்டது என்று கேட்கில், அது பிரமாண சத்தியுள்ள ஒருவராலும் செய்யக்கூடிய காரியமல்லவென்று உணரவேண்டியது. ஏனெனில், முன்னுள்ள யாதொன்றை எடுத்து வேறொன்றாகச் செய்ய, பூவுலகில் பிறந்தவர்களுக்கு இயன்ற சத்தியாம். அப்படியே, குயவர் மண்ணால் குசக்கலங்களை செய்வார்கள்; தட்டார் வெள்ளியாலும் பொன்னாலும் பூஷணங்களைச் செய்வார்கள்; அப்படி செய்யப்பட்டவைகளை அழித்தால் முன்னுள்ளபடி, மட்கலங்கள் மண்ணாகவும், பொன்னாபரணங்கள் பொன்னாக

வும் போகும். ஆனால், முன்னுள்ளவைகளை ஒன்றும் எடாமல், அதை முதல் பொருளாக உண்டாக்குவது சர்வத்திற்கும் ஆதியாயிருக்கிறவருடைய அப்பிரமாண வல்லமையால் முடியுமேயல்லாமல், பிறப்பு இறப்பு உள்ள மனிதரால் செய்யக்கூடிய செய்கையல்ல. அத்தகைய வல்லமையுள்ளவரையே சர்வேசுரன், அல்லது கடவுள் என்கிறோம். அப்படியே கடவுளல்லாமல், யாதாமொருவர் ஏதாவதொன்றை முதற்பொருளாய்ச் செய்ததாக, இதுவரை யாராகிலும் பார்த்ததும் கேட்டதுமுண்டோ? ஆனதால், சர்வத்திற்கும் வல்லவராயிருக்கிற சர்வேசுரன் தாமே உலகத்தை உணடுபண்ணினாரென்று உணரவேண்டியது.

## மூன்றுஞ் சங்கையாவது.

இப்படிப்பட்ட உற்பத்தி சிருஷ்டிப்புகளைச் சர்வேஸ்வரன் யாது காரணமாய் உண்டாக்கினார், அவர் அப்படி உண்டுபண்ணுதிருந்தால், அவர் சுவாப ஆனந்தத்திற்கு யாதொரு குறைவுந் தாழ்வு முண்டாகுமோ, இருக்க வுறைவிடமும் சீவிக்க நிமித்தமும் தப்புமோ என்று கேட்கில் அப்படி ஒருக்காலுஞ் சொல்லக்கூடாது. சகல நன்மை சுரூபியாயிருக்கிற சர்வேஸ்வரனுக்குக் கருதக் கூடிய சகல நன்மையுஞ் சுகமும் ஆனந்தமும் தமது சுபாபத்திற்குள்ளே தானே இருப்பதால், புறகாரணத்தால் தேவையானது ஒன்றுமில்லை. அது எப்படி என்றால், சூரியன் தனது சுவாபத்திற்குள்ளிருக்கிற பிரகாசத்தினால், தானே பிரகாசிக்கின்றது; அக்கினி தனது சுபாவச் சுடரால், தானே எரிகின்றது. அப்படியே சர்வேஸ்வரன் தமது சுவாபத்திற்குள்ளிருக்கிற சகல நன்மையாலும் நன்மைச் சம்பூரணமாய் சகல ஆனந்தத்தாலும் ஆனந்தபரனைச்

சகல லோகபாரத்தையுந் தாங்குகிற தமது ஆனந்த வல்லமைதானே தம்மை தாங்கியிருக்கிறதல்லாமல், அதற்கு வேறே ஓரிடமும் ஆதாரமும் செய்யும் உபாயமும் தேவையானதல்ல. ஆதலால், இப்படிப்பட்ட உச்சாயத்திற்கு உலகத்தை படைத்ததென்று சொல்லாமல் அதற்கு விசேஷமான வேறே இரு நிமித்தங்கள் தேவ அனுகூலத்திற்குள் உண்டென்று காணலாம் அதாவது: தம்மை உலகமறியவும் அறிந்து தம்மால் வேண்டிய உபகாரங்களை பெறவும் வேண்டுமென்ற இந்த இரு நிமித்தங்களுக்காக, உலகமும் மற்றுமுண்டான சகல பொருள்களும் உண்டாக்கப்பட்டன என்று அறியக்கடவோம். அது எப்படியென்றால், சித்திர விசித்திரமாய் நிருமிக்கப்பட்ட பிரதிமையைக் காணும்போது, அதை சித்திரித்த சித்திரக்காரனுடைய கை சூட்சமத்தையும் அருமையையும் புகழ்ந்து பேசுவார்கள். சஞ்சல விப்பிரயோகமற்று, கிரமத்தோடு நடக்கின்ற ஒரு இராச்சியத்தைக் காணும்போது, அதை அரசாளுகின்ற அரசனுடைய விமரிசை நீதி நெறி மகிமையைப்பற்றி புகழுவார்கள். சத்துராதிகளின் ராணுவங்களை முறியடித்து வல்லபகொத்தளத்தளிகளைச் சங்கரித்து போர் செய்கிற சேனைகளைக் காணும்போது, சேனாதிபதியின் வீர பராக்கிரமத்தை வாழ்த்துவார்கள். அப்படிப்பட்ட தாஷ்டிகங்களை உடையவன் அரசனாலாகிற உபகாரவிருதியைப் பெறும்படி கருதியிருப்பான். அது போலவே 'ஆகட்டும்' என்ற ஒரு வாக்கியத்தால், சகலத்தையும உண்டாக்கின சர்வேஸ்வரனுடைய அளவில்லாத வல்லபத்தையுந், திரிபுவனங்களை அசையாத கிரமமாய் நடப்பிக்கிற நெறி ஞானத்தையும், சகல மனுஷ பிராணிகளையுங் குறைவில்லாமல் இரட்சிப்பிக்கிற கிருபை தயாபத்தையும் பார்த்து, அப்படிப்பட்ட ஞானமும் நீதியுந் தயாபரமு

முள்ள சர்வேஸ்வரனை அறிந்து போற்றி செய்து, சமஸ்த ரும் இவ்வுலகத்தில் துக்க நிவாரணத்தையும், அவ்வுலகத் தில் மோட்ச சம்பாவனையையும் அடையவேண்டுமென்று, அவற்றையெல்லாம் உண்டுபண்ணின திவ்ய அபிப்பிராயத் தின் உச்சாயமென்று அறியக்கடவோம். ஆகையால், இப் படிப்பட்ட கருணை எந்த உவமானத்திற்கு உதாரணமாகு மென்றால், பால் நிறைந்த கொங்கைகளை உடைய தாயான வள் பாலூட்டவும் சீராட்டவும் தாலாட்டவும் தன் குழந் தையை தேடி திரிவதற்கும், சலம் பெருகின சமுத்திர மானது தண்ணீரை தன்னிடத்து அடக்க மாட்டாமல், பூமியை சுலபமாக்கும்படி மேகக் குக்ஷிகளை கீறிக் கிழித்து மழையாகப் பொழிந்து, விளாக உத்தியானங்களில் இறைத்து விளைவித்து, சகல பூமியையும் செழிப்பாக்குவ தற்கு உதாரணமாகும். ஆகையால் சர்வேஸ்வரனுடைய தேவசித்தத்தில் நிறைந்த கருணை சாகரம், பாய்ந்தோடி வரும் பாய்ச்சலுக்கு அனுகூலமாகவும், அந்தத் தண்ணீர் நிறைகிற பாத்திரங்களாகவும், ஆத்துமங்களை யுண்டாக்கி அந்த ஆத்துமாக்களுக்கு இரட்சண்ணியமாக உலகத்தை யும், அதிலடங்கிய சகல பொருள்களையும் உண்டாக்கின அபிப்பிராயமாம் என்று அறியவும்.

## உலக சிருஷ்டிப்பு வெளியான விபரம்.

சர்வசக்தியும் சர்வ வல்லமையுமுள்ள கடவுளவர், உல கத்தை சித்தரித்த தன்மையை வர்ணிப்பது, துல்லப மாகவே தோற்றப்படுகிறது. ஏனெனில் ஒரு வார்த்தை யிலேயே சர்வத்தையும் அமைத்தாரென்பதா ஒவ்வொன் ருய் சிருஷ்டித்துக் கொண்டு வந்தாரென்பதா, என்பது நமது கூற்று. அச்சமயம், நாமாவது அல்லது இன்னும் யாராவது அடுத்திருந்து பார்த்திருப்போமாகில், ஒரு

வரைக்கொண்டொருவர் விளக்கிக் கொள்ளலாம். அப்படியுமில்லாதபோது, எப்படி எவ்விதஞ் செய்தாரென்று நிர்ணயிப்பது அசாத்தியமாயினும், நமது அகக்கண் என்கிற புத்திக்கண்ணென்னும் தீபிகையினுல், ஆராய்ந்து பார்க்குமிடத்து, சர்வ வல்லபமுள்ளவர் ஒரே வார்த்தையில் சர்வத்தையும் சிருஷ்டிக்க வல்லவராயினும், அவற்றைச் சொல்ல வரும்போது, ஒவ்வொன்ருய்ச் சொல்லி வெளிப்படுத்த வேண்டியதல்லாமல் எல்லாவற்றையும் ஒன்ருய் உருட்டித்திரட்டி, ஒருவர் மனதில் புகுத்திவிடுவது சாத்தியமானதல்ல. அதனுல் பரிசுத்த முனிவராகிய மோசேசென்பவருக்குப் புலப்படும்படி, கடவுளவர் வரிசைக்கிரமமாய் விளக்கிக்காட்டிய தன்மையைத் தெளிந்துகொள்வாம்.

கடவுளவர், தமது விருப்பத்தை சனசமூகத்துக்கு வெளிப்படுத்தத் துணைக்கருவியாக மோசேசென்பவரைத்தெரிந்துகொண்டு,பற்பல சமயங்களில் சப்தத்தினுல் ஆக்ஞாபித்து வந்த முறைமைப்படி, உலக சம்பவங்களையும் நீதிமுறைமையையும் வெளிப்படுத்தத் திருவுளமாகி பூமண்டலத்திற்கு நடுவிடமாகிய தேசத்திலே சீனுயின் மலையின்மேலே வரக்கற்பித்து, நாற்பது நாள் அன்ன பானமற்று உபவாசிக்கச் செய்து, அதனுல் அற்ப சொற்ப அசடற்று நிர்மல சுத்தனுக்கி, அவர் மூலம் வெளிப்படுத்தின தன்மையே உலகம் படைப்புண்டது துவக்கி, மூன்று யுகங்களிலும் நடந்தேறிய கால விசேஷங்களையும் பிரபந்தமாக எழுதிவைத்தனர். அவ்வரிய விசேஷங்களை சத்திய வேதாகம மூலமாய் வாசித்து அறிந்து கொள்ளலாம்.

அவ்வரிய நூலிலறைந்த வண்ணமே, தீர்க்கதரிசிகளால் தெய்வவாக்காய் முன்னறிவித்த பிரகாரம், திருவுளப்படி திருவுளமே கிறீஸ்து பிரானுய், நிர்மல சுத்திகமாய் மனிதவதாரஞ் செய்து, மக்கட்கு சன்மார்க்க முறை

மைகளை கற்பித்தருளினவைகளிலிருந்து சில இங்கெடுத்துரைப்பாம்.

## கிறீஸ்த்து பிரான் போதனை; சமதர்ம பயன்.

ஒருவன் கிறீஸ்த்து நாதரை அணுகி "போதகரே நான் என்னத்தைச் செய்து, நித்திய சீவியத்தை அடைவேன்" என்று கேட்க, அவர் அவனை நோக்கி "வேதப் பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்ன? எவ்வாறு வாசிக்கிறுய்", என்று கேட்டார். அதற்கு அவன் பிரத்தியுத்தாரமாக, "உன் தேவனுகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும் உன் முழு தத்துவங்களோடும் சிநேகிப்பாயாக; உன்னைப் போல் உன் பிறனையும் சிநேகிப்பாயாக" என்று எழுதியிருக்கிறதென்ருன். அவர் அவனை நோக்கி, "நீ சரியாய் பதிலுரைத்தாய்; அப்படியே செய் அப்போது பிழைப்பாய்" என்ருர். அவனே, தன்னை நீதிமானென்று காண்பிக்க விரும்பி, யேசுநாதரைப் பார்த்து", என் பிறன் யார் என்று கேட்டான். யேசுநாதர் மறுமொழியாகத் திருவுளம் பற்றினதாவது: ஒரு மனிதன் ஜெருசலேமிலிருந்து ஜெரிக்கோ நகருக்கு இறங்கிப்போகையில், கள்ளர் கையிலகப்பட்டான். அவர்கள் அவனிடத்திலிருந்ததை எல்லாம் பறித்துக்கொண்டு அவனை காயப்படுத்தி குற்றுயிராய் விட்டுப்போனுர்கள். அத்தருணத்தில் ஆசாரியன் ஒருவன் அவ்வழியாய் வரும்படியாய் நேர்ந்தது. ஆனுலும் அவனைக்கண்டு அப்பாலே போய் விட்டான். அவ்விதமே ஒரு லேவித்தனும் அவ்விடத்திற்கு சமீபமாய் வந்து, அவனைக்கண்டு பக்கமாய் விலகிப் போனுன். ஆனுல் வழிப்போக்கனுன சமாரியன் ஒருவன் அவனருகே வந்து அவனைக்கண்டு மனமிரங்கி, கிட்ட

அணுகி, எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, அவனுடைய காயங்களை கட்டி அவனை தன் வாகனத்தின் மேலேற்றி, ஒரு சத்திரத்தில் கொண்டுபோய் அவனை பராமரித்தான். மறுநாள் அவன் இரண்டு தெனியர் நாணயங்களை எடுத்துச் சத்திரக்காரனுக்குக் கொடுத்து, இவனை விசாரித்துக்கொள், நீ அதிகமாய் செலவழித்திருப்பதை எல்லாம் நான் திரும்பி வரும்போது உனக்கு உத்தரிப்பேனென்றான். ஆகையால் கள்ளர் கையிலகப்பட்டவனுக்கு, இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான் என்றார். அதற்கு அவன், அவனுக்கு தயை செய்தவனே என்றான். அப்போது யேசுநாதர் நீயும் போய் அவ்விதமே செய் என்றார்.

சகோதர சகோதரிகளே, ஜன சமூகமே, மேலே சொல்லப்பட்ட கிறீஸ்துபிரான் போதகத்தில், உன்னைப் போல் உன் பிறனையும் சிநேகிப்பாயாக என்பதிலிருந்து, என்ன தோற்றப்படுவன என்பதை யோசியுங்கள். உன்னைப்போல் உன் பிறனையும் சினேகிப்பாயாக என்பதால், அவனுக்கு ஏற்பட்ட காயங்களைப்போல் இவனும் காயப்படுத்திக்கொண்டு இவனும் குற்றுயிராய் கிடப்பதா அல்லது அவனுக்கு அவன் தயை செய்ததுபோல் செய்கிறதா யென்று யோசித்துப்பாருங்கள். இப்போ தன்னைப்போல், பிறனை சிநேகிக்கவேணுமென்பது எந்த நோக்கத்திலடங்கி இருக்கிறதென்பதை யோசியுங்கள். ஒருவன் உபத்திரவப்படும் சமயம் தன்னைப்போல் அவனை சமமாய் நினைத்து தனக்கு ஏற்பட்ட தொந்திரவை எவ்வித்ம் நீக்கிக்கொள்ள முயற்சித்துக்கொள்வானோ, அதுபோல பிறனுக்குச் செய்வது பிறர் சிநேகம் அல்லது சமத்துவமாகிறதென்பதை கவனித்துக்கொள்ளுங்கள். ஆனதால் சமத்துவமென்பது என்னவென்றும் அது எவ்வித

மாய், எதிலிருந்து, உதயமாகிறதென்றும் உற்று யோசியுங்கள். தன்னைப்போல் பிறனை சிநேகிக்கவேணுமென்பதிலிருந்து, சமத்துவம் உதயமாகி வருகிறதா அல்லது வெறெங்கிருந்தாவது குதித்து வருகிறதா என்பதை யோசியுங்கள். பிறர் சிநேகமென்பதிலிருந்து சமத்துவம் வெளியாகிறதால், பிறர் சிநேகமென்பது எந்த அளவில் நிறுத்தப்பட்டிருக்கிறதென்பதையும் அதிலிருந்து உதயமான சமத்துவத்தின் நிலைமை அளவு எத்தனை வரையில் நிலைநிற்குமென்றும் யோசியுங்கள். இந்த சமத்துவத்தினூடே, சமதர்மமென்பதும் சகோதரத்துவம்போல் இணைபிரியாது கலந்து நிற்கிறதா, அல்லவா, என்பதையும் யோசியுங்கள். இத்தோடு, தற்சமயம் தாண்டவமாடும் சுயமரியாதை என்பது பொருத்தமாகுமா என்பதையும் யோசியுங்கள். சமதர்மம் சமத்துவம் சுயமரியாதை என்பவையைப்பற்றி பின்னால் விளக்கி காட்டப்போவதால், இவற்றை இத்தோடு நிறுத்தி, உன்னைப்போல் உன் பிறனையும் சிநேகிப்பாயாக என்னும் கிறீஸ்துபிரான் போதகத்திலிருந்து, இனியும் கொஞ்சம் கவனிப்போம். பிறர் சிநேகமென்பது, அழிந்துபோகும் நிலையற்ற சரீரத்தைப் பொருத்துமட்டுமல்ல, நிலையுள்ளதும் அழியாததுமான ஆத்மாவையும் பொருத்ததாயிருக்கிறது; சரீர சவுகரியத்தில் குறைவுபட்டு பரிதவிப்போரை காணுகிற எவனோ, அவன் இயன்றஅளவு உதவி செய்யவேணுமென்றும், தேவ கட்டளையை மீறி பாவத்தில் விழப்போகிறவனையும் பாவத்தில் விழுந்து கிடப்பவனையும் இரட்சிக்கவேணுமென்றும் கொள்ளவேணுமென்பதே தன்னைப்போல் பிறனை சிநேக்க வேணுமென்னும் தேவ கட்டளையில் அடங்கியிருக்கிறதென்று அறிந்துகொள்ளுங்கள்.

## சமத்துவம்.

சமதர்மமென்பதும் சமத்துவமென்பதும் ஒரே நோக்கத்தை உடையதே தவிர, வேறுபட்டதல்ல; அதன் உரிமையை ஆராய்ந்து பார்க்குமிடத்து, உன்னைப்போல் உன் பிறனையும் சிநேகிப்பாயாக என்பதிலடங்கியிருக்கிறது. தன்னைப்போல பிறனையும் பாவிக்கவேணுமென்பதால், தன் உத்தியோகத்தைப்போல் தன் சத்துவத்தைப் போல் பிறனை உயர்த்திவைக்கவேணுமென்பதல்ல, அல்லது இரு கண்ணில்லாதவனுக்கு ஒரு கண்ணை பிடுங்கி கொடுக்கவேணுமென்பதாவது அல்லது அவனைப்போல் இரு கண்களையும் கெடுத்துக்கொள்ள வேணுமென்பதாவதும் அல்ல; அல்லது நாட்டிலுள்ள பொருள்களை யாவரும் சமமாய் அனுபவிக்கவேணுமென்கிற கியுக்திபண்ணி போதிக்கும் சுயமரியாதைக்காரர்கள் பொருத்தமற்ற போதனையுமல்ல, பின்னேதென்றால், சலனப்பட்டு தவித்து நிற்கும் ஆதரவற்றோரையும், ஏழை பரதேசி பட்டினி கிடப்போரையும், நோயுற்றோரையும், தன் சக்திக்கு தகுந்தமட்டில் இரக்கத்தோடு உதவி செய்து ஆறுதலளித்து, ஆதரிக்க வேணுமென்பதுதான் பிறனை சிநேகிக்கவேண்டுமென்பதும் அதனுள் ஒடுங்கி நிற்கும் சமதர்மம் சமத்துவமென்பதுமாகும். இவ்வரிய முறையே, இற்றயவரை அனுபோகத்திலிருந்து வருவதாகும். எப்படியெனில்; உலகமனைத்தும் பட்டணங்களிலும் பற்பல கிராமங்களிலும், சந்து பொந்துகளிலு முதலாய், வறிஞோருக்கு அன்னவஸ்திரம் கொடுப்பதும், அன்ன சத்திரங்களமைப்பதும், நோயுற்றோரை ஆதரிப்பதும், பரிகாரஞ் செய்வதும், இலவச கல்வி கற்பிப்பதும், குடியிருப்பு வசதி செய்துகொடுப்ப

தும், முதலிய அநேகாநேகவிதமாய் நடைபெற்று ஆதரிக்கப்பட்டு காலாகாலமாய் நடைமுறையிலிருந்து வருகிறதுமாகிய இவ்வகையையே பிறர் சிநேகமென்றும், அதனுள் ஒடுங்கி நிற்கும் சமதர்மம் சமத்துவத்தின் இலட்சணமென்பது கிரமமாகும்.

தற்போதுள்ள சமதர்மிகள் கொண்ட சமத்துவத்தின் நோக்கமானது, பணக்காரரையும் ஏழைகளையும் உயர்ந்தோரையும் தாழ்ந்தோரையும், உயர்வென்பதையும் தாழ்வென்பதையும் அறவே ஒழித்து, ஒரேதரத்தில் மட்டப்படுத்துவதுதான், சமத்துவம் சமதர்மமென போதிக்கிறார்கள். ஆனால் இக்கொள்கை நிலை நிற்குமா, என ஒரு கேள்வி கேட்கிறோம். அளவுகடந்த இந்நூதனமுறை நீடித்து நிற்கமுடியாதெனவும், இது சனசமூகத்திற்கு மிக்க கேடுண்டுபண்ணக்கூடியதெனவும் நிச்சயமாக கூறுவோம். அது எப்படியென்றால் மூளைக்கோளாறுடைய சமதர்மிகளின் தோற்றப்படி போதித்துவரும் போதனையில், காணப்படுகிற சமத்துவமென்பது, அற்பசொற்பமாவது உயர்வு தாழ்வு இல்லாதபடி இருத்தல் வேண்டும், அவ்விதம் உயர்வு தாழ்வு இல்லாத போது, ஏவுகிறவன் யார் அதை கேட்கிறவன் யார், ஏவுகிறவனும், அதை கேட்கிறவனும் இல்லாதபோது, இராட்சியம் நடைபெறுமா என யோசித்துப்பாருங்கள். ஏவுகிறவனென்றும் அதை கேட்கிறவனென்றும் இருந்தால், சமத்துவமிருக்கிறதாவென்று யோசித்துப் பாருங்கள். இவ்வித சமத்துவ முறையை கைக்கொண்டால் உயர்வு, தாழ்வு அற்றுப்போய் ஏவுதலும், கேட்குதலுமில்லாமல் இராட்சியம் நடைபெறாமல் போவதோடு, கொள்ளல், விற்றல் முதலி

யன இல்லாமல், உண்ண உணவற்று, உண்டி சுருங்கி, கடைசியாய் பிணமாய், எடுப்பாரற்று, கழுகு பருந்தினங்களுக்குக் கொண்டாட்டமாகி, ஜன சமூகம் திண்டாட்டத்தில் வந்துவிடும். இவ்வழியுள்ள முறையே, தற்போது ஏற்பட்டுள்ள சமதர்மிகள் போதனை முறையின் சமத்துவ பயனாகும்.

இன்னும் சமத்துவமென்பதுபற்றி "தவறி விழுவோருக்கு ஊன்றுகோல்" என்னும் புத்தகத்தில் போதுமான வரை எழுதியிருக்கிறதென்றாலும், சமத்துவம் என்பது பற்றி மாறுபாடான நோக்கங்கொண்ட சு. ம. அண்ணாத்தைகள் போதிக்கும் வேகத்தின் நோக்கை உற்று யோசிக்குங்கால் ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்றவாறு மனிதர் நெட்டை, குட்டையையுங்கூட ஒரே அளவாக வைத்து நறுக்கிவிடுவார்களோ, நறுக்கி ஒரே மட்டமாய் சமப்படுத்திவிடுவார்களோ என சந்தேகம் உண்டாகி விட்டது. ஏனெனில் மூளைக்கோளாருடைய இவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சியின் போதனை வேகமான நோக்கமானது சமத்துவமுறை கடந்து மிதமிஞ்சிப்போவதாலேயே இவர்கள் கூர்மையான ஆராய்ச்சியில் நெட்டை, குட்டையையுங் கூட நறுக்கி சமப்படுத்தவேணுமென்று தோற்றமாயிருக்குமோவென யூகிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் அளவுகடந்து போகும் அதிக கூர்மை அதிக மழுங்கலாகுமென்று ஒரு சந்நியாசி ரூபிக்கிறார். அதெப்படியென்றால், பிராண சிநேகிதரான பி. ஏ. கிளாசில் படிக்கும் மூவர், லீவு காலத்தில் அடர்ந்த கானகத்திற்குள் புகுந்து ஆனந்திக்குமாறு உணவு பதார்த்தங்களுடன் உல்லாசமாய்ச் சென்றுகொண்டிருக்கும்போது

பற்பல தமாஷ் வார்த்தைகளிலிருந்து "நான் புத்திசாலி, நான் புத்திசாலி" என மூவருக்கும் வாக்குவாத முண்டாகி, முற்றி, முரண்பட்டது. இந்தளவில் பயணம் தடைபட்டு மூவரில் எவர் புத்திசாலி என தீர்மானித்துக்கொள்ளும்படி திரும்புங்காலில் குறுக்கே ஒரு காட்டு ரஸ்தாவில் வயோதிகரான ஒரு சந்நியாசி போய்க்கொண்டிருப்பதைக் கண்டு, மூவரும் ஏகமனதாய் இச்சந்நியாசியாரிடம் தங்கள் வாதத்தைத் தீர்த்துக்கொள்வதென முடிவுசெய்து, சந்நியாசியை அணுகி, நமஸ்காரஞ்செய்து தங்கள் வாதத்தைத் தெரிவித்து தங்களில் புத்திசாலி யாரென்று தீர்க்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதற் கிணங்கி சந்நியாசியார் ஒருவரை நிற்கும்படிக்கும், மற்றிருவரை தூரப் போகும்படிக்கும் கற்பித்து, தான் நடந்துபோகும் மணல்சாரியான பாதையைக் காண்பித்து, இதில் நெடுக வட்டவட்டமாயிருக்கிறதே அதென்னவென்று கேட்டார். அதற்கு அவன் யாரோ உரலைத் தூக்கித்தூக்கி வைத்துவைத்துக்கொண்டு போயிருக்கிறான் என்றான். அவன் காரியம் அத்தோடு நிற்க, தூர நின்ற இருவரில் ஒருவரை வரும்படி கற்பித்து நெடுக இருக்கும் வட்டமாவதென்னவென்று கேட்க, அவன் யானை நடந்துபோயிருப்பதாகச் சொன்னான். இன்னும் வேறே சொல்லுவதற்குண்டா என, அந்த யானைக்கு வலது கண் பொட்டையென்றும், அதனாலே வலது பக்கத்திலுள்ள மரங்கள் நன்றாய் தழைத்திருந்தாலும் அதைத் தொடாது இடதுபக்கமுள்ள வாதுகளை ஒடித்துக்கொண்டு போயிருக்கிறதென்றும் சொன்னான், இன்னும் ஏதேனும் சொல்லுவதற்குளவா என, இல்லையென்றபின்னர் மூன்றாவது பேர்வழியை அழைத்து, வட்டத்தைக் காட்டி இது

என்னவென்று கேட்க, யானை நடந்திருப்பதாகவும், அதற்கு வலது கண் பொட்டையென்றும் இரண்டாவது பேர்வழி சொல்லியபிரகாரமே சொல்ல, இன்னும் ஏதாவது சொல்வதற்குண்டா என்று வினவ, அந்த யானை பெண் யானை என்றும், அது பூரண கெர்ப்பமென்றுஞ் சொன்னான். அது எப்படி என்று கேட்க, அது முன்னங்கால் இரண்டையும் அழுத்திவைத்தும், பின்னங்கால் இரண்டையும் தாங்கி வைத்தும் போயிருப்பதினாலே கெர்ப்பத்தின் பாரத்தால் முன்னங்கால் அழுத்தப்பட்டிருப்பதால் கெர்ப்பமுள்ள பெண் யானை என்று முடித்தான். பிறகு சந்நியாசியானவர் மூன்றாவது பேர்வழி அதிக கூர்மையான புத்திசாலியாயினும் அதிக கூர்மை அதிக மட்டையாகிவிடுமாதலால், இரண்டாவது பேர்வழியை புத்திசாலி என தீர்மானிக்கிறேனென்றார். சொன்னதும், மூன்றாம் பேர்வழி வழக்குத் தொடங்கி இத்தீர்மானத்தைத் தனது ஊர் வந்து பஞ்சாயத்தார் முன்னிலையில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று, சந்நியாசியைக் கையும் பிடியுமாகத் தன் ஊர் கொண்டுவந்து பஞ்சாயத்துக் கூட்டி நடந்தவைகளை விவரமாகச் சொல்ல, ஊரார் சந்நியாசியார் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படிக்கு மிக்க மரியாதையோடு கேட்டுக்கொண்டார்கள். அதன்மேல் சந்நியாசியார் திருவுளம் பற்றியதாவது:—தற்போதுள்ள நிலைமைப்படி மூன்றாவது பேர்வழியை புத்திசாலி என தீர்ப்பது நிலை நிற்காது; ஏனெனில் அதிகக் கூர்மை அதிக மட்டையாகிவிடுமாதலால் இந்த விஷயத்தைத் தீர்க்க இரண்டு வருஷம் கெடு வைக்கிறேன். அதுவரை இவ்விருவர் நடவடிக்கைகளைக் கவனித்துவாருங்கள். நான் இரண்டாவது வருஷம் இந்தத் தேதிக்கு இங்கு வருகிறேன். அப்போது தீர்மானஞ்

செய்யலாம் எனச் சொல்லி சிலவு பெற்றுக்கொண்டு சந்நியாசியார் பயணமானார். ஊரார் இருவரிடத்தும் கவனமுற்றவர்களாகவே இருந்தார்கள். இப்படியிருக்க, மூன்றுவது பேர்வழிக்கு சிறிது நாளையில் கெண்டைக் காலில் ஒரு இரணமேற்பட்டு, பல சிகிச்சை செய்தும் குணப்படாமல் அவ்வூரின் சனி மூலையில் வந்து தங்கி வைத்தியம் செய்துகொண்டிருந்த சந்நியாசியிடம் இரணத்தைக் காட்ட, அவர் பொடு தழையை வைத்துக் கட்டினால் வாசியாகிவிடுமென்று சொல்ல, அதுமுதல் மூன்றும் பேர்வழி பொடுகு தலை தேட ஆரம்பித்து பொடுகு இருக்கும் தலை அகப்படாமல் சலித்து அயர்ந்த சமயத்து, அமாவாசை விரததினம் தன் வாசலில் வந்து 'தேகி' என்று சொலியவனை நிமிர்ந்து பார்க்க, அவன் தலையிலும், திரேக முற்றிலும் பொடுகு இரணம் நிறைந்திருக்கக்கண்டு, மூன்றும் பேர்வழி மிக்க சந்தோஷமடைந்து, தேகியை அணுகி வந்து, ஐயா, இலைபோட்டு சாப்பிடலாம் உள்ளே வாருங்கள் என்றழைக்க, தேகி உள்ளே வந்ததும் பூட்டைக் கொண்டுவந்து வெளி வாயிலைப் பூட்டிவிட்டு, பரணிமேல் ஏறி, ஒரு தாம்புக் கயிற்றை எடுத்துவர, தேகி திகிலடைந்து போக்கற்றிருப்பதால் கப் சிப்பென்று நிற்க, மூன்றும்பேர்வழி தேகியை இறுகக் கட்டி, கீழே தள்ளி, தன் இரணமுள்ள கெண்டைக்காலை பொடுகு தலையில் வைத்து காலையும் தலையையும் இறுகக் கட்டிவிட்டான். சிலநேரஞ்சென்று கட்டை அவிழ்த்துவிட்டு, தேகிக்கு இலை போட்டு, பூட்டையுந் திறந்துவிட்டு, சாதமெடுக்கப் போன சமயம்பார்த்து தேகி நழுவிவிட்டார். அன்னத் தட்டோடு வந்த மூன்றும்பேர்வழி தேகியைக் காணமல் வெளியில் வந்து பார்க்க, தேகி எட்டி நிற்பதைப் பார்த்து

சாப்பிடும்படி அழைக்க, ஐயாவே சாப்பிடுவதிருக்கட்டும் என் தலையில் உங்கள் காலை வைத்துக் கட்டின விவரம் தெரிந்துகொள்ள நிற்கிறேனே தவிர, சாப்பிடுவதற்காக வல்ல என்று சொல்ல, ஐயா, இதோ என் கெண்டைக் காலிலுள்ள இரணம் வெகு சிகிச்சை செய்தும் குணமாகாமலிருக்க, ஒரு சந்நியாசி பொடுதலையை வைத்துக் கட்டினால் குணப்படுமென்று சொல்லிய முதல் இதுவரை பிரயாசைப்பட்டும் கிடைக்காமல் இன்றுதான் நீர் கிடைத்தீர், ஆனதால் வைத்துக்கட்டினேனென்றான். தேகி அந்த சந்நியாசியார் எங்கே இருக்கிறார் என்றான். ஐயா, அவர் இவ்வூரைவிட்டுப் போய்விட்டார் என்று சொல்ல, எந்த இடத்திலிருந்து இதைச் சொன்னார் என்று கேட்க, சனி மூலை பாகத்திருந்தாரென்கவும், தேகி சனி மூலை பாகமாய் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தான். இதைக்கண்ட மூன்றும் பேர்வழி தேகியைப் பார்த்து, என்ன நமஸ்காரஞ் செய்தீரை என்று கேட்க, ஐயா, அந்த மகானுபாவர் பொடு தழையை வைத்துக் கட்டென்று சொன்னதற்காக நமஸ்காரஞ் செய்தேன், இடித்துவைத்துக் கட்டென்று சொல்லியிருந்தாலோ, இந்நேரம் என் தலையை....என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான். அதுபோலவே சுயமரியாதைக்காரரின் விஞ்ஞான ஆராய்ச்சியின் அதிக கூர்மை அதிக மளுங்கலாகவே முடியுமென தெளிவுபடுவதால், மனிதரினும் நெட்டை குட்டையையும் நறுக்கி சமப்படுத்துவார்களோ என தோற்றப்படுகிறது.

இன்னும் சமத்துவமாக வைக்கப்போவதாக தாண்டவமாடித்திரியும் சுயமரியாதைக்காரர்கள், தீராத குஷ்டரோகியின் அசௌகரியத்தை சமத்துவமாக்குவதெப்படி

என்று கேட்கிறோம். பசிப்பிணியின் வேதனையைக்காட்டிலும் தேகப்பிணியின் உபாதனை கொடூரமல்லவா? இவ்வகையை எப்படி சமத்துவமாக்கி விடுவார்களென்பதுதான் நமது திகைப்பு ஒருவன் சௌக்கியவானாகவும், இன்னொருவன் அசௌக்கியவானுவும், வேதனை பொறுக்காமல், ஐயோவென்று அலறிக்கொண்டிருந்தால், சமத்துவ மென்னும் பாடலில் அரம் விழுந்து விட்டதல்லவா? இன்னும் ஒரு பாகத்து மழை வருட்சித்துச்செழித்தும், மறுபாகத்து மழை இல்லாமல் காய்வதானால், மழை வருட்சிக்கச்செய்து சமத்துவமாக்குவதெப்படி? இவைகளெல்லாம் இந்தப் புலிகளால் ஆகக்கூடியனவாவென்று யோசித்துப் பாருங்கள். இவைகளை சாதிக்க முடியாவிட்டால், எல்லாவற்றையும் சமத்துவமாக்கப் போகிறோமென்று பறை சாற்றுவதில் என்ன அர்த்தமிருக்கிறதென்று யோசித்துப் பாருங்கள்.

இன்னும் உலகத்திலுள்ள எல்லாவற்றையும் பொதுவாக்கி எல்லோரும் பொதுவாய் அனுபவிக்கவேணு மென்கிறார்கள். இதைத்தான், சொக்குபொடி யொத்த பக்கா ஏமாத்தலென்று சொல்லுகிறோம். மாமிசத்துண்டைக் காட்டியவுடன், நாய் சுற்றிச் சுற்றிக்கொண்டிருப்பதுபோல, ஏழைமக்கள் இவர்களை சுற்றிச் சுற்றிக்கொண்டேயிருப்பதற்காக, அவர்கள் தொப்புள்வரை தித்திக்கும்படி சொல்லும் ஏய்ப்பு வார்த்தையேதவிர சமத்துவமாகவும் சுகியாகவுமிருக்கச் செய்யப்போவதில்லை. ரஷியாவின் குட்டிக்கரடிகளாகிய இவர்கள், ரஷியாவைப்போல் குழப்பஞ்செய்து விடலாமென கங்கணங்கட்டிக்கொண்டு, ஏழைமக்களை வசப்படுத்த, தித்திப்பான ஏய்ப்பு வார்த்தைகளை சரமாரியாய்

R3,4
N34
68214

பொழிந்து வருகிறார்கள். இதை நம்பி ஏமாந்த ஏழை மக்கள் தாங்களும் பணக்காரர்களைப்போல் சமத்துவமாகி விடலாமென வயறுப்பிக்கொண்டு ஒரு சமயம் குழப்பம் கலகத்திற்கு உள்படுவாராகில், பிரிட்டிஷ் அரசாட்சியின் துப்பாக்கி குண்டு சரமாரியால் கூட்டோடு எமலோகஞ் சேரும் சமத்துவமே லபிக்குமல்லாது, பிரட்டர்கள் புழுகிற பணக்கார சமத்துவத்தின் வாடைமுதலாய் முகரப்போவதில்லை. இவ்விதமே, ஏழைமக்களை ஏய்த்து சகாசேர்த்துக் கொண்டு, கொலையும் கொள்ளையுமாடிப் பொது உடமை அரசாங்கமென ஏற்படுத்திய ரஷியாதேச ஏழைமக்களின் அபிலாசை கனவைப்போல் மாறி, உள்ளதும் கெட்டு தடா நொள்ளைக்கண்ணு என்று, கஷ்டத்தாலும் பசிப்பிணியாலும் வாடி துன்புறுவதை "தவறி விழுவோர்க்கு ஊன்று கோல்" என்னும் புத்தகத்தில், நாம் விளக்கிக்காட்டியிருப்பதோடு, அதற்குப்பின் நமக்கு தெரியவந்தவைகளில் முக்கியமானதும் மிகமிக பரிதாபத்திற்குரியதுமானதும் யாதெனில், 1933ம் வருடம் ஜனவரி மாதம் முதல் தேதி முதல்,ஜூன் மாதமுடிய ஆறுமாதமெடுத்த கணக்கில், தென் ரஷியாவில் மட்டும் இருபது லட்சம் ஜனங்கள் பட்டினியால் மடிந்து விட்டார்களென பேப்பர்கள் துக்க பறை சாற்றிக்கொண்டிருக்க, அக்கொள்கையைச் சார்ந்த சித்திர புருஷர்களாகிய அண்ணாத்தைகள் ஏழைமக்களை பணக்காரராக்கப் போவதும், பட்டினி இல்லாமல் சாப்பிட வைக்கப்போவதும், சமத்துவமாக்கி உயர்த்தி உச்சியில் வைக்கப்போவதும் எப்படி என்று கேட்கிறோம். இப்படியே ஏழைமக்களை ஏய்த்து கிளர்ச்சியை உண்டுபண்ணிக்கொண்டு வயறுவளர்க்க கூடிக்கொண்டு திரியும் குறவர்கள், சுயமரியாதை என அர்த்தமற்ற நாமஞ் சூட்டிக்

கொண்டிருக்கும் சுயமரியாதை லட்சணத்தையும், அதற்கு பணஉதவிசெய்து கிளர்ச்சி செய்ய தூண்டிவிட்டுக்கொண் டிருக்கும் ரஷியாவின் சூழ்ச்சியையும் விவரித்துக் காட்டு வோம்.

## சுயமரியாதை

சுயமரியாதை என்பது தனக்குத்தானே சுயமாய் ஏற்பட் டிருக்கும் மரியாதை என்று சொல்லப்படும். அது அவ ரவர் ஜென்மிக்கும்போதே, ஜென்மித்த பிண்டத்தில் ஜீவன் எவ்விதம் கலந்துகொள்கிறதோ, அதுபோலவே மரியாதை என்பதும் சுயமாய் அமைந்து கொண்டதாலே சுயமரியாதை என்னும் நாமம் வெளிப்பட்டிருக்கிறது. இவ்விதம் சுயமாய் அமைந்திருக்கும் சுயமரியாதைக்கு லிமிட்டெட் கம்பெனி துவக்குவதற்கு பங்காளிகளாக ஷேர்ஸ் ஹோல்டர்களைச் சேர்க்குமாப்போல, சுயமரியாதைச் சங்கமென ஏற்படுத்தி அங்கத்தினர்களைச் சேர்த்து வரு வது பொருத்தமற்றதாகவே யிருக்கிறது. சுயமரியாதை என்பது ஒவ்வொருவரிடமும் தானாகவே அமைந்திருப் பதா அல்லது அங்கத்தினர் சேர்ந்தபின் அமர்வதா என் பது நமது கேள்வி. தானாகவே அமைந்திருப்பதானால், சங்கமும் அங்கத்தினரும் பொருந்தாது. அங்கத்தினர் சேர்ந்து அமைவதானால், சுயமரியாதை என்னும் நாமம் பொருந்தாது. கிரமம் இப்படியிருக்க, சுயமரியாதை என் னும் மகிமை நாமத்தைச் சூட்டிக்கொண்டு கிரமமற்ற ஒரு கூட்டஞ் சேர்ந்துகொண்டு, கடவுளில்லை என புரளிபண்ணு வதும் மதத்தையும் மதக்குருக்களையும் வசைகூறி தூற்று வதும், பெண்களை கற்பென்னும் சங்கிலியால் கட்டிவைத் திருக்கும் கட்டை உடைத்து தன்னிச்சையாய் மிருகத் தைப்போல் திரிய வேணுமென்பதும், முதலாளி ஆதிக் கத்தையும் அரசாங்கத்தையும் அழித்துவிட வேணுமாய்

கிளர்ச்சிசெய்வதும், ஏழைகளையும் கூலிக்காரர்களையும் பணக்காரராக உயர்த்திவைக்கப்போவதுபோல ஏய்ப்பது மாகிய, ஆபாசமான போதகத்தை மேல்கொண்ட இக் கூட்டத்தை, சுயமரியாதைக் கூட்டமெனச் சொல்வது பொருத்தமாகுமா? அவமரியாதைக் கூட்டமெனச் சொல்வது பொருத்தமாகுமா? என யோசித்துப் பாருங் கள். இவ்வித ஆபாசமான கூட்டத்தால் இன்னல் ஏற் படா வண்ணம் தடுப்பதே, புத்திமான்களின் கடமையா கும். எப்படியெனில் செம்மறித் தோலை போர்த்திக் கொண்டுவந்த ஓநாயின் விஷமம் வெளிப்படையான வுடன், செம்மறி என விட்டுக்கொண்டிருப்பார்களா? ஓநாய் என அடித்துக்கொல்லுவார்களா, எனச்சொல்லுங் கள். ஓபா வரண்டி ஒருவன் சர்வ உத்தமனென நாமஞ் சூட்டிக்கொண்டதுபோல சுயமரியாதை என்னும் மகிமை நாமத்தைச் சூட்டிக்கொண்டு கிளர்ச்சிக்கும் புரட்சிக்கும் ஆதாரமான துர்ப்போதனைகளைப் பரப்பி வரும் இக்கூட் டத்தை விரட்டி அடிக்காது விட்டுக்கொண்டிருப்பது சன சமூகத்திற்கும் சர்க்காருக்கும் நீதியும் முறைமையு மாகுமா?

## ரஷியா சதி.

இன்னும் அனுபோகத்திலிருக்கும் ரஷியா தேச சம தர்ம பயனென்றுண்டு. அதன் வழுக்கைப்பற்றி "தவறி விழுவோருக்கு ஊன்றுகோ"லென்னும் புத்தகத்தில், தெளிவுற எழுதியிருப்பதால், அதன் தன்மையைப்பற்றி சிறிது இங்கு விளக்கிக்காட்ட வேண்டியது அவசியமாயி ருக்கிறது. அதேதெனில் மூக்கரையன் தனக்குண்டான மூக்கரைப் பட்டத்தின் அவமானத்தை சகிக்கமாட்டாத வனாய், எல்லோரையும் மூக்கரையாக்கி ஆறுதலடைய அவாக்கொள்வதுபோல, ரஷியா தன்க்கேற்பட்டிருக்கும்

அவமானத்தைச் சகிக்க மாட்டாமல், தன் துர்பிரயோகத்தை எங்கும் பரப்பி தீங்கிழைத்து, தனக் கேற்பட்டிருக்கும் மானபங்கத்தில் ஒருவாறு ஆறுதலடையக்கருதி, தனது காரியஸ்தர்களுக்கு அனுப்பியிருக்கும் யாதாஸ்த்து பின்வருமாறு :

> ரஷியா வியாபாரச் சங்க கௌன்சில் கூட்டமொன்று கூடியபோது ஆஸ்திரேலியா, இந்தியா, தென் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் வேலை நிறுத்தம் கலகம் முதலியன நிகழ்ச்சி செய்ய பிரசாரஞ் செய்யவேணுமென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(30—7—33 "குடி அரசு")

ஐயோ! தீய நெஞ்சுடைய ரஷியாவே, பாதக நெஞ்சுடைய ரஷியாவே, நீ கெட்டுப்போன புண்ணை ஆற்றிக் கொள்ள, மற்ற தேசங்களை மருந்தாகக் கொள்கிறாயோ? உன் தேசத்தில் மூட்டிவிட்ட நெருப்பை மற்ற தேசங்களிலும் மூட்டிவிடப்பார்க்கிறாயோ? உன் தேசத்துப் புரண்டோடிய இரத்தப் பிரவாகத்தை மற்ற தேசங்களிலும் புரண்டோடத் தூண்டுகிறாயோ? உன் தேசத்து நடந்த கொலையும் கொள்ளையும் மற்ற தேசங்களிலும் நடக்கப் பிரயாசைப் படுகிறாயோ? உன் தேசத்து உணவற்று வாடுவதுபோல், மற்ற தேசங்களும் பட்டினிகிடந்து கஷ்டப்பட நினைக்கிறாயோ? சதி துரோகியே, சதிசெய்யும் தன்மைதானே, உன் அரசாங்க லட்சணம்! இதுதானா, உன் சமதர்ம யோக்கியதை! இதுதானே, உன் சமத்துவத்தின் யோக்கியதை! கலகத்தையும் குழப்பத்தையும் பாலாய்க் குடிக்கும் இராட்சியமே, இந்த அனாசாரப் பாலை குடிக்கத்தான் நாயக்கர் உன்னை நாடிவந்ததோ? இத்தனை லட்சணமான உத்தியோகத்திலமரத்தான் உன்னை தேடிவந்ததோ? இதனாலேதான் சுயமரியாதை புரட்சிக் கோலங்

கொண்டதோ? உன் உபதேசந்தான் கடவுளில்லையென்று போதிப்பதோ? உன் உபதேசந்தான் கற்பென்னும் கட்டை உடைத்து ஆணும் பெண்ணும் மிருகத்தைப்போல் திரியவேணுமென்று போதிப்பதோ? தீய நெஞ்சுடைய ரஷியாவின் காரியஸ்தர்களாகிய சுயமரியாதைக்காரர்களே, இதற்காகத்தானு பாமர சனங்களிடத்து பரிதாபப்படுவது போல, பாசாங்கு காட்டுவது? உங்கள் எஜமாஞகிய ரஷியாவின் உத்தரவுப்படி, கலகம் குழப்பத்தை பிரிட்டிஷ் இராஜ்ஜியத்திலும் நடத்தலாமென யோசிக்கிறீர்களோ? அந்த ஜம்பம் இங்கு பலிக்காது என்றும், பிரிட்டிஷ் பொசுக்கிவிடுமென்றும் நினைத்துக்கொள்ளுங்கள். ஆனல் சுயமரியாதைக் கோலத்தை கெவர்ன்மெண்டு அறியாமலிருக்கிறதா? காங்கிரஸ் பக்கம் திருப்பிக் கொண்டிருக்கும் கண்ணை திருப்பும் போது, சுயமரியாதை எந்த சந்து பொந்து வழியாய் ஓட்டம்பிடிக்கு மென்பதை சனசமூகம் அறியாமலில்லை. சர்க்காரே அஞ்சத்தக்க மதிப்போடும் கௌரவத்தோடும் 50 வருஷமாய் மேதாவிகளால் நடந்து வந்த காங்கிரசே, சர்க்காரை எதிர்த்த சட்டமறுப்பு ஒன்றினல் மெலிந்து ஒடுங்கி நசுங்கிப் போயிருக்க, அரசாங்கத்தையே அபேஸ்பண்ண கருதி நிற்கும் புரட்சிக் கோலங்கொண்ட சுயமரியாதைக்காலிகளின் கதி என்னவாகுமென்பதை சனசமூகம் அறியாததல்ல. கௌரவம் நிறைந்த காங்கிரசில் அக்கிராசனம் வகித்த ஸர். ஹென்றி காட்டன் என்னும் பேர்பெற்ற ஆங்கிலப் பெரியாரை வைசிராய் லார்டு கர்சன் பேட்டிகொடாமல் வெறுத்துத் தள்ளியது ஞாபகமில்லையா? கௌரவம் நிறைந்த காங்கிரஸினிடத்தே சர்க்கார் அத்தனை துவேஷம் கொண்டிருக்க, அரசாங்கத்தை அழிக்க நினைத்திருக்கும் புரட்சிக் கோலங்கொண்ட

சுயமரியாதை கொஞ்சத்தில் பொடிப் பொடியாய் போகாதா? தனக்கு வரவிருக்கும் ஆபத்தை ஒருவாறு தடுத்துக்கொள்ளவே சட்டசபையில் இடந்தேட சூழ்ச்சி செய்கிறதல்லவா? இந்தக்கோலங்கொண்ட சுயமரியாதைக் கூட்டத்திற்கு ஓட்டும் கொடுத்து நாற்காலியும் போட்டு தலைப்பாகையும் வைத்து தனக்குத்தானே கொள்ளி வைத்துக்கொள்ள ஜனசமூகம் புத்திகெட்டா போய் விட்டது? சட்டசபை எலக்ஷன் வரும்வரையிலா, சுயமரியாதை நிற்கப் போகிறது? அப்படி நின்றாலும் அதைச் சார்ந்தாருக்கு ஜனசமூகம் ஓட்டும் கொடுக்குமா? அப்படி கொடுத்தால், தானே தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொண்டது போலென்று ஜனசமூகம் நினையாமல் போகுமா? கொஞ்சத்திற்குள் தூள் தூளாக பறந்து போகவிருக்கும் புரட்சிக் கோலங் கொண்ட சுயமரியாதைக்கூட்டம் வெகு பெருமை பாராட்டிக் கொள்ளுகிறது. அங்கே மகாநாடு கூட்டினேம். அறு பதினாயிரம் பேர்கள் வந்தார்கள், இங்கே பொதுக்கூட்டம் கூட்டினேம் இருபதினாயிரம் பேர்கள் வந்தார்கள்; அங்கே அதைப் புரட்டினேம், இங்கே இதைப் புரட்டினேம் என்று பேப்பர் வாயிலாய் பாராட்டி பெருமலைப்பைப் புகட்டி ரஷியா வரையிலும் எட்டவைத்து, இன்னும் துட்டடிக்கவே சூழ்ச்சி செய்கிறது. இத்தனை கோலங்கொண்ட சுயமரியாதைக் கூட்டம், தலையாட்டம் கொடுத்து தத்தளித்து நிற்கும் ரஷியாவை, யாரும் கேவலமாய்க் கருதாதபடி புகழ்ந்து கூறி கனப்படுத்தி பாமர ஜனங்களை ஏய்க்கவே சூழ்ச்சி செய்துவருகிறது. ரஷியாவானது கிரமத்தோடு நடக்கும் இராட்சியமானால், காலாடிகள் போக்கிரிகள் குடிகேடர்களைப்போல, இந்திய ஜனசமூகத்து கலகம்

குழப்பம் முதலியன உண்டாக பிரசாரஞ் செய்யும்படி தூண்டி விடுவார்களா, என ஜனசமூகம் யோசித்துணர வேண்டியது.

## பெண்கள் சுவாதீனம்.

(30—7—33 குடி அரசு) அ. இராகவன் அறியாதபடி லகளேயாகச் சொல்லினும், பெண்களுக்கு முதன்மை கொடுக்கப்படாதென்னும் நோக்கத்தோடேவே கடவுள் ஆதி மனுஷனாகிற ஆதாமின் இடதுபுற விலாவெலும்பொன்றை எடுத்து ஆதி மனுஷியாகிய ஏவாளை உண்டுபண்ணினாரென்பது உண்மையே. அவ்விதம் ஆதாமினின்று ஏவாளை உண்டு பண்ணினதுபோல மிருக இனங்களை உண்டுபண்ணாமல் ஆண் வேறாகவும் பெண் வேறாகவும் தனித்தனி சிருஷ்டியாய் உண்டுபண்ணப் பட்டதால், மிருக இனங்கள் சேர்க்கையில் மட்டும் கூடிப்பிரிந்து பின் ஒன்றையொன்று சிநேகியாமல் பாசபட்சமற்று பாத்தியதையற்று சுயேச்சையாயிருக்கும் தன்மைப்படி மனுக்குலமுமிராமல் புருஷன் பெண்சாதி என்னும் பாசபந்தனமான சிநேகத்தோடும் உலகவிருத்திக்காக பிறக்கும் பிள்ளைகளை பேணிக் காத்து நன்னெறிபயிற்சியில் விர்த்திக்கச்செய்யும் தன்மையோடும் குடும்பம் இசைவாய் நடந்துவரவேண்டிய கிரமத்திற்காகவும் ஏகோபித்து ஒருமித்து சிநேகமாய் ஒரே சரீர அவயவம் போல் இணைபிரியாதிருக்க திருச்செயலானதால், ஆதாம் தேகத்திலிருந்தே அதிலும் அவன் இடதுபுற விலாவெலும்பிலிருந்தே அவனுக்குத் துணைவியாக ஏவாளை உண்டுபண்ணச் சித்தமானார்.*

---

* இவ்விதம் ஆதிமனுஷன் சரீர அம்சத்தினின்று ஆதிமனுஷியின் சரீரம் சிருஷ்டிக்கப்பட்ட உண்மை, நம் இந்தியாவின் பூர்வீக காலக்கொள்கைகளுள்ளும் ஒருவாறு காணப்படுகிறது.

அப்படி உண்டுபண்ணின கடவுள் ஆதாம் வலதுபுற விலா எலும்பில் எடாமல், இடதுபுற விலாவெலும்பில் எடுப்பானேன் என்றால், வலதுபுறம் வலிமையுள்ள பாகமாயிருப்பதால், அதிலுண்டாகிற ஸ்திரீ மூர்க்கத்தனமாயும் முரண்பாடாயுமில்லாமலிருக்கவும் புருஷனுக்குப் பெண்சாதி கீழ்படிந்து இணங்கி நடக்கவுமே, வலுவு குறைந்த பாகமாகிய இடதுபுறத்தில் எடுக்கச் சித்தமானார். அப்படி ஆதாம் விலாவெலும்பிலிருந்து ஏவாளை உண்டுபண்ணின கடவுளவர் ஆதாம் தலை, கால், மார்பு, முதுகு எலும்பிலிருந்து எடுத்து ஏவாளை உண்டுபண்ணக்கூடாதா என்றால், ஸ்திரீயானவள் தலைமையாய் தன் புருஷனை ஆளாதபடி தலையில் எடாமலும், அடிமையாயிராதபடி கால்புறமெடாமலும் மிகுந்த அறிவுடையோளாய் மேல்கொள்ளாதபடி மார்பில் எடாமலும், பின்னறிவாளியாய் போகாதபடி முதுகில் எடாமலும், இணைபிரியாத் துணைவியாய் சகோதரத்துவம்போல் அன்னியோன்யமாய் புருஷனுக்கு பெண்சாதி அடங்கி நடக்கும்படிக்கு ஆதாம் பக்க விலாவெலும்பிலிருந்தே, ஏவாளை கடவுளவர் தமது சர்வஞானத்தால் நிரூபித்து, நிமித்திகரித்திருக்கிறாரென்று உணர்ந்துகொள்ள வேண்டியது.

---

எப்படியெனில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிர்மா, மானசபுத்திரரென்னும் ருத்திரமூர்த்தியை பாதியுடம்பு ஆணும் பாதியுடம்பு பெண்ணுமாய் அர்த்தநாரிரூபமாக சிருஷ்டித்தாரென்றும், பிர்மா ருத்திரரை நோக்கி இரண்டுவிதமாயிருக்கிற உன்னை பிரத்தியேகமாய் பிரி என ஆக்ஞாபிக்க, ருத்திரர் ஸ்திரீபுருஷரூபமான தனது உடம்பை தனித்தனியே ஆணும் பெண்ணுமாகப் பிரித்து பிரசாவிருத்தி பண்ணினாரென்றும், இவ்விருவரினின்றும் உற்பத்தியான பிரஜைகள் சவுமியங்களும் பயங்கரங்களும் சாந்தங்களும் கோரங்களும் கருத்தவைகளும் வெளுத்தவைகளுமாக மனுவை சிருஷ்டித்தாரென்றும், சமஸ்கிருத விஷ்ணுபுராணம் முதலம்சம் ஏழாமத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது *

இன்னும் கேட்பார் பேச்சைக் கேட்டு எழுதிய இராகவன் உண்மையில் வேத ஆராய்ச்சி செய்திருப்பாராகில், ஆதாம் எலும்பிலிருந்து ஏவாளை உண்டு பண்ணினதாக எழுதி யிருக்கும் வாக்கியத்தின் அடுத்தாப்போலே, கடவுளவர் ஏவாளை நோக்கி, "புருஷன் அதிகாரத்தின் கீழிருப்பாய் அவன் உன்னை ஆண்டுகொள்வான்," என்னும் தேவன் அருளிய கட்டளையையும் வாசித்து, தன் அறிவைக் கொண்டே, ஸ்திரீ புருஷனுக்கு அடங்கி நடக்க வேணு மாய், திரிகால சம்பவங்களை வெட்டவெளியாய் அறிகிற சர்வ ஞானமுடைய கடவுளால் அமைக்கப்பட்ட கிரமத்தை மாற்ற எவராலும் முடியாதென உணர்ந்துகொண்டிருப்பா ரென நம்புகிறேன்.

இன்னும் தெய்வத்தால், ஏற்படுத்தப்பட்டவைகள் அழிந்துபோகக் கூடியவையல்ல என்பதை, தோழர் இரா கவன் உணரும்படி சில இங்கெடுத்துக்காட்ட விரும்பு கிறேன். அதேதெனில், "புருஷன் அதிகாரத்தின் கீழிருப்பாய்", என்னும் தேவ கட்டளைக்கு மாறுபா டாய், பெண் வார்த்தைக்கு கீழ்படிந்து நடந்த தசரத இராயன், கௌசிகை சொல்லைக்கேட்டு மானபங்கத்தால் மனோவேதனை அடைந்து, மரண மடைந்தது தெரிய வில்லையா? சீதா வார்த்தையைக்கேட்ட இராமர் திண்டா டினது ஞாபகமில்லையா? சூர்ப்பநகை பேச்சைக் கேட்ட இராவணனும், அவன் சேனை படை இராட்சியமும் பஸ்ப மாகவில்லையா? இன்னும் உங்களைப்போல் அறியாமல் மூர்க் கத்தனமாய் பெண்களுக்கு சுவாதீனம் கொடுத்து அனுப வித்துப்பார்த்த மேல்நாட்டார் பெண்களின் திறமைக் குறைவால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை கையும் மெய்யு மாய்க் கண்டு, முன் நிலமைக்கே திருப்பி அனுப்புவதை பேப்பர் வாயிலாய் வாசித்தறிய வில்லையா? இப்போதா

வது நமது தோழர் இராகவன் திருச்செயலுக்கு எதிரிடை புரிவது பலிதப்படாதென்பதை உணர்ந்து, பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கவேணுமென்பதை விட்டு விடுவாரா? புருஷனுக்கு பெண்சாதி கீழ்படிந்து நடக்கவும், பிறக்கும் குழந்தைகளையும் வீட்டு ஒழுங்குகளையும் ஸ்திரீ கவனிக்கவும், ஜீவனத்திற்கு வேண்டியவைகளை புருஷன் சேகரிக்கவும், இவ்விதம் குடும்பம் முறையாய் நடந்து வருவதற்காகவே ஆதாமிலிருந்து ஏவாளை கடவுள் உண்டுபண்ணினது கிரமமாமென்றறிந்து கொள்ளுங்கள்.

## தீண்டாமை.

தீண்டாமை என்பது மாயாமயமான ஓர் சம்பவம், இது நமது நாட்டில் மகா சிக்கலானதும் ஹாணியாயிருப்பதுமான ஓர் விஷயம். இது பாம்பென்றும், தாண்டப்படா பழுதை என்றும், மிதிக்கப்படாத ஓர் மாயாமயம். ஏனெனில் தற்கால விஞ்ஞானிகள் கோலத்தைப்போல முற்கால விஞ்ஞானிகள் கொண்டகோலமேயாகும். எப்படி எனில், கடவுளென்பவர் ஆதாம் என்னும் ஒரு மனிதனை உண்டுபண்ணி அவன் எலும்பிலிருந்து அவனுக்கு துணைவியாக ஒரு ஸ்திரீயை உண்டாக்கி, அவ்விருவர் வழியாக ஜனசமூகம் உற்பத்தியாகி பலுகியிருக்க உயர்த்தப்பட்டதென்றும் ஒடுக்கப்பட்டதென்றும் வகுக்கப்பட்டிருப்பதே மாயாமயமாகும். இம்மாயாமயம் ஜனசமூக சிந்தனைக்குள் புகுந்து அரோகசியம் அருவருப்பு என்னும் வழுக்கை உதிக்கச்செய்து, அது நாளடவில் வளர்ந்துபாறைபோல் இறுகி கெட்டிப்பட்டிருக்கிறது. இப்பாறையை உடைக்கினும் உடையா; பெயர்க்கினும் பெயரா; நிலமையிலமர்ந்திருப்பதே திகைப்புறக்கூடிய மாயாமயமாயிருக்கிறது. இதற்கு ஆதாரம் என்னென்று பண்டயகாலத்தார் நோக்கங்களை ஆராய்ச்சி செய்து பார்த்தால், அவ

னவன் அசுத்த சுத்த அந்தஸ்த்து நிலமையிலிருந்தே வேறு கூறுக்கப்பட்டு, அரோகசித்து ஒதுக்கப்பட்டதாக வே தோற்றப்படுகிறது. அரோகசித்து ஒதுக்கப்பட்ட தெல்லாம், இற்றயவரை தன் நிலமையை உணர்ந்தே தன்னிலே தானுய் ஒதுங்கிக்கொண்டே நிற்பதை அநுபோக வாயிலாய்க் காணலாம். இவற்றுள் பலபிரிவினைப் பட்டிருப்பினும் சுருக்கிச் சொல்லில், தீண்டப்படாத இந்து என்றும் தீண்டப்படாத கிறீஸ்த்துவர்கள் என்றும் இருவகைப்படும். தீண்டப்படாத இந்துக்களோ தள்ளப்பட்ட படுகுழியிலிருந்து, எடுப்பாரற்று கிடக்கிருர்கள். •இவர்களை ஆகாய மண்டலம் வரை உயர்த்திவைக்கப்போவதாக தாண்டவமாடுபவர் முக்கிய நோக்கமோ ஏமாந்த (சோனகிரிகளாகிய) தீண்டப்படாதாரின் ஓட்டுகளைக்கொண்டு சட்ட சபையில் இடந்தேடிக் கொள்ளவே, சூழ்ச்சி செய்யப்படுகிறது. சட்ட சபையில் இடந்தேடிக்கொள்ள முன் ஜாக்கிறதையுடையோரால் ஏய்க்கப்படும் பகட்டுகளை எல்லாம் நம்பிக்கொண்டு, ஏதோ தங்களை இரக்ஷிக்கப் போகிருர்களென, அவர்கள் வாலைப் பிடித்துக்கொண்டே திரிகிருர்கள். சமீபத்தில் நடக்கப் போவதாகவிருக்கும் எலக்ஷன் முடிந்த பிறகோவென்ருல், மறு எலக்ஷன் துவக்கும்வரை சிந்துவாரற்றுக் கிடப்பார்களென்பதை இவர்கள் கனவிலும் நினைக்காதவர்களாகவே யிருக்கிருர்கள். இத்தனை காலமாய் தீண்டாமை ஒழிக முன்வந்தேனென்றவர்கள் கோலமெல்லாம் நாடக இராஜா ஆதிக்கத்தைப்போல, வெளிச்சம்போட்டு மறைந்து போனதல்லாமல், ஏதாவதொரு பலனை அடைந்தோமா என உண்ணிப்பாராதவர்களாகவே யிருக்கிருர்கள்.

தீண்டப்படாத கிறீஸ்த்துவ சமூகமோ என்ருல், கிறீஸ்த்து வேதத்தலைவர்களாகிய குருப்பிரசாதிகளால்

கைகொடுத்துத் தூக்கப்பட்டு அவர்கள் ஆதிக்கத்திலுள்ள தேவாலயங்களில் அனுமதிக்கப்பட்டு, தேவ வழிபடுதலில் சமமாக்கப்பட்டு, அத்தியாவசியமாகிய இரக்ஷண்ணிய பாதையில் முன்னேற்றமடைந்து வருகிறது. இதற்கு மேலும் இன்னும் தீண்டப்படாத சமூகத்து கவலை கொண்டிருக்கும் வேதத்தலைவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளெல்லாம், மாயாமயம் நுழைந்து பாறைபோலிறுகிக் கிடக்கும் மனமுடையோரால் நொருக்கப்பட்டு தலைவர்கள் பாடும் திண்டாட்டத்தில் வந்திருப்பவைகளை கையும் மெய்யுமாய் பார்த்துக்கொண்டிருந்தும் நன்றியறியாது, இவர்களுக்காக தலைகொடுத்து நிற்கும் தலைவர்களிடத்தே முரண்பட்டு நிற்கிறது. இவர்களுக்காக தலைகொடுத்து நிற்கும் தலைவர்களை அடுத்தே, இவர்களுக்கு வேண்டியவற்றை நாளடைவில் அடைந்துகொள்ள வகையறியாது, ஒரேதாண்டில் உயர்ந்துபோக அபிலாசைப்பட்டு பிளவுபட்டு நிற்கிறது. குருடனுக்கு குருடன் வழிகாட்டவந்து, இருவரும் பள்ளத்தில் விழுந்து மடிந்த வகையிலேயே, நயவஞ்சக சூழ்ச்சியால் வேஷம் போடும் சுயமரியாதைக் கூட்டத்தைத்தழுவ யோசிக்கிறது. தங்கள் சமூகத்திலுள்ள தீண்டப்படாத இந்து சமூகத்தை கோவில்வாயிலில் முதலாய் விட்டு இரக்ஷிக்கத்திறமையற்ற சுயமரியாதைக்கூட்டம், கிறீஸ்த்துவ தீண்டப்படாதாரை இரக்ஷிக்கப் போவதாக வெட்கமில்லாமல், பிதற்றித்திரிகிறது. கோவிலுள் கூட்டிப்போவதாக ஆர்பாட்டம்போட்டு கூட்டிப்போய் மானங்கெட்டு புறங்காட்டி வந்த சுயமரியாதைக் கூட்டம், அதுமுதல் கடவுளில்லையென்று பிதற்றித்திரிகிறது. பித்தலாட்டமுடைய சுயமரியாதைக் கூட்டத்தின் கபடமான சூழ்ச்சிகளை பூர்ணச்சந்திரனைப்போல் விளக்கிகாட்டியும், அக்கபடர்களால் இதுவரை என்ன நன்மை

ஏற்பட்டதென உணர்ந்துபாராத பகுத்தறிவற்ற தன்மையே, அவற்றை அறவே ஒழியாது நிற்கிறது. இது தாழ்ந்த பாதாளத்தில் விழுந்து தவிக்குமோ, அல்லது தங்களை இந்தமட்டில் கைதூக்கிவிட்டு இன்னும் தூக்கிவிட சமயந் தேடிக்கொண்டிருக்கும் தங்கள் வேதத்தலைவர்களை நாடுமோ என்பது நமது கூற்று.

இன்னும் தீண்டாமை என்னும் கூற்று ஒழிவதற்குள்ள உபாயங்களை தீர்க்கமாய் கையாடாமலே, சுய நலமடைய சூழ்ச்சிசெய்யும் விஞ்ஞானப் பதுமைகள் தாண்டவமாடுவது, வியப்பை உண்டு பண்ணுகிறது. தீண்டாமை என்னும் கூற்று மக்கள் மனதில் எத்தனை ஹாணித்தரமாய் வேரூன்றியிருப்பதென்பதை உற்று யோசிப்போருக்கு அது ஒழிவதற்குள்ள உபாயம் புலப்படாதிராது. அதை அனுபோக முறையில் கையாடாதிருப்பதினாலேயே, அது நாளடைவில் வளர்ந்து வருகிறது. தீண்டாமை ஒழியவேணுமென்னும் கருத்தோடு, 1792ம் வருஷத்திலேயே துவக்கிய பார்த்துவான் சமஸ்த்தானத்து ஸ்ரீ ராஜாராம் மோகனராய் அவர்கள் பெலமான முயர்ச்சியாலேயே தீண்டாமையின் ஆணிவேர் அறுபட்டு இருந்தவிடந்தெரியாமல் மறைந்திருக்க வேண்டியிருந்தும், தீர்க்கமான முறையைக் கைக்கொள்ளாக்காரணமே, பூர்த்திபெறாது போய்விட்டது. தீண்டாமை ஒழிய பிராணனை லட்சியம் செய்யாது, விரதம் பூண்ட காந்திப் பெரியார் பொறுப்பின் சூழ்ச்சி மேல்நோக்கைக்கொண்ட பிராமணப் பெண்ணின் வழியாய் வெளிப்பட்டுவிட்டது. தீண்டாமை என்பது பாறைபோல் உறைந்திருக்கும், வாலர் முதல் வயோதிகர் வரை, "தீண்டாமை ஒழிக" என வாய் பந்தல் போடும் சூழ்ச்சி நிலைநிற்பதல்ல எனவே நன்கு விளங்குகிறது. இவர்களை ஒருங்கே ஒழித்து, பொதுஜனமோ,

இந்தியா கவர்ண்மெண்டாரே பொறுப்பேற்றுக்கொண்டு, இம்மாயாமயம் அணுகாதபடி கல்விச்சாலைகளை ஏற்படுத்தி, பாலர்களை சகசித்து புழங்கவிடுவதே முதல் உபாய மாகும். தீண்டப்படாதார் செய்து வரும் அசுத்தமான வேலைகளை ஒழித்து, தச்சுவேலை, கொத்து வேலை, தட்டார வேலை' வர்ணவேலை, சித்திரவேலை, நெசவுவேலை, குந்தன வேலை, கிலிக்ட்டுவேலைகளில் முதல்தரத்தொழிலாளிகளாக தேர்ச்சி அடையச்செய்வதும், படிப்பை புகட்டி உத்தி யோகத்திலமரச்செய்வதும் இரண்டாம் உபாயமாகும். தீண்டப்படாதார் தினசரி தவறாமல் ஸ்நானஞ்செய்வதும், சுத்தமான ஆடைகளை தரிப்பதும், மாட்டு மாமிசத்தையும் மதுபானத்தையும் விலக்குவதும் மூன்றும் உபாயமாகும். இம்முறையே சிறிது காலத்துள், தீண்டாமை ஒழியுமே யல்லாது, இதைவிட்டு நூற்றுக்கணக்கான வருஷங்களாக பற்பலவழி வகைகளையும் செய்து பார்த்த கத்தோலிக் தலைவர்களான குருப்பிரசாதிகளால் முடியாமல் போனது மன்றி, இந்துப் பெரியாராகிய சிரத்தானந்தர், தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர், முதலிய பேரியோர்களாலும் எடுத்த முயற்சி பலிதப்படாது தகர்ந்து விட்டதை உணர்ந்துகொள்ளவேண்டியது.

## குருத்துவேஷம்.

சுயமரியாதைக் கூட்டத்தார் ரோமான்கத்தலிக் வேதத் தையும் அதன் தலைவர்களையும் அபாண்டமான கட்டுரை களால் ஆபாசமான நடைமுறையில் பகுத்தறிவற்ற தன் மையில் தூற்றிவருகிறார்கள். அவற்றிற்கு ஆதாரமோ, அண்டப் புளுகேயாகும். புளுகே உருபமான கற்பனையால் மக்கள் மனப்பாண்மையைக் கலக்கி, ஊக்கத்தைத்தளர்த்தி, கத்தோலிக் வேதத்தில் வெறுப்பேற்படச்செய்து நாஸ்த் திக குழியிலாழ்த்தி, சுயமரியாதைக் கூட்டத்தில் சேர்த்துக்

கொள்ள சூழ்ச்சி செய்து வருகிறார்கள். கத்தோலிக் வேதத்தின் வாயிலாய் பற்பல அற்புதங்கள் மூலமாய், கடவுள் காலாகாலமாய் தம்மை பிரத்தியக்ஷமாக்கி வந்ததுபோலவே, தற்போது வசிக்கும் ஜனசமூகத்திற்கும் பற்பல அற்புதங்கள் மூலமாய் கடவுள் தம்மை ஞாபகபடுத்திக் கொண்டு வருவதை, கையும் மெய்யுமாய் கண்டுவரும் கத்தோலிக்கர், நாஸ்திகக் கோலங்கொண்ட சுயமரியாதை வலையில் மாட்டிக்கொள்வார்களா? அபாண்டமான கட்டுரைகளால் கத்தோலிக் மதத்தைத்தாக்கி, ஜனசமூகத்தை மனமாற்றஞ்செய்து நாஸ்திகமாக்கிவிட வெகு ஜாலஞ்செய்கிறார்கள். க்த்தோலிக் மதத்தை தாக்க வருபவர்கள் அவ் வேதத்திலுள்ளவைகளை ஆதாரமாகக்கொண்டு, அவை அபத்தம் அவை தப்பு என ரூபிப்பார்களேயாகில், அவைகளுக்கு சரியான மறுமொழி சொல்லிக்காட்டலாம். இதை விட்டு ஐந்து கண்ணனென்பவர்களுக்கு என்ன மறுமொழி சொல்லக்கூடுமென்பதை ஜனசமூகமே யோசித்துக்கொள்ளவேண்டியது. கத்தோலிக் மதத்தின் ஆதார மூலமாய் தப்பென ரூபிக்க வந்தேனென்றவற்றிற்கு, "தவறி விழுவோருக்கு ஊன்றுகோலென்னும்" புத்தக அநுபந்த மூலமாய் கொடுத்த சவுக்கடியை உணர்ந்ததாலே, இப்போது வேதத்தை ஆதாரமாகக் கொள்வதை விட்டுவிட்டு வேதப்பிரஷ்டையான செனிக்யூபாதிரி தூற்றிய அபாண்டங்களை ஆதாரம் போலக்கொண்டு தூற்றி வருகிறார்கள். இதைப் பற்றியும் அநேக மறுப்புகள் எழுதப்பட்டு, தாக்கினவர் வாய் அடைபட்டுக் கிடக்கின்றதென விளக்கிக்காட்டியும், செவிடன் காதிலூதிய சங்குக் கொப்பாகவேயானது. இனி கத்தோலிக்கரை தூற்ற வேறுவகை கிடைக்காமல், செனிக்யூபாதிரியின் பண்டைய காலத்து குப்பையிலேயே புரளு

கின்றனராதலால், இவர்கள் புத்தி தெளியும்படியும் ஜன சமூகம் அறியும்படியும், செனிக்யூபாதிரியின் தன்மையை சிறிது விளக்கி காட்டுவோம்.

செனிக்யூ என்ற பாதிரி, கத்தோலிக் கிறீஸ்துவனாக இருந்து 1833ல் குருப்பட்டம் பெற்றான். இவன் மேலதிகாரியான சிக்காகோமாகாணத்தின் மேற்றிராணியாராகிய ஓரிகான் என்பவரால், இவனது தப்பிதமான நடபடிகளை கண்டுபிடிக்கப்பட்ட 1856ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 19ந் தேதி, குருக்களுக்கு இயல்பாயுள்ள வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டான். 1856ம் வருஷம் நவம்பர் மாதம் 24ம் தேதி, தான் செய்த தப்பிதங்களை மன்னிக்கும்படியும், இனி அவ்வித தப்பிதங்களை செய்ய மாட்டேனென்றும், மேற்றிராணியாரிடம் எழுத்து மூலமாய் மன்னிப்பு கேட்டான். மறுபடியும், இவன் நடபடிகளை கவனித்துவந்த மேலதிகாரியாகிய மேற்றிராணியாரால், 1858ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 3ம் தேதி சகலருமறிய கத்தோலிக் சபையிலிருந்து நீக்கப்பட்டான். நீக்கப்பட்டபின், புராட்டஸ்டாண்டு மதத்தில் சேர்ந்தான். இவனுக்கு தன்னை துரத்தின மதத்தின்மேல், எத்தனை வன்மமிருக்கவேணுமென்பதை ஜனசமூகமே யோசிக்கவேண்டியது. அப்படியிருந்தும், கத்தோலிக் வேதத்தில் அற்பமாகிலும் குறை கூற வகையில்லாததால், 1861ம் வருஷத்தில் இவன் எழுதிய பிரபந்தத்தில், கத்தோலிக்கருக்கு விரோதமாய் யாதும் கூறமுடியாதென எழுதி வைத்தான். பிறகு "நான் ஏன் ரோமான் சபையை விட்டேன்" என்னும் தலைப்பெயர் பூண்ட ஒரு புத்தகத்தையும் எழுதினான். அதிலாகிலும், கத்தோலிக் மதக்குருக்களையாவது, பாவசங்கீர்த்தனத்தைப்பற்றியாவது, இன்னும் வேறெந்த

விஷயத்தைப்பற்றியாவது, யாதொரு அற்பக் குறையாவது கூறவில்லை. ஏனெனில் கத்தோலிக் வேதசாராம்சத்தின் பசை அவன் இருதயத்தில் இன்னும் தோய்ந்திருந்ததினுல், அபத்தமாக எதுவும் சொல்ல துணிவு ஏற்படவில்லை. இதைப்பற்றி எத்தனை எடுத்துக் காண்பித்தும், கத்தோலிக் வேதத்தை தூற்றிக்கொண்டிருக்க சுயமரியாதைக் கூட்டத்தாரால் தண்ணீர் தெளித்து அவிழ்த்து விடப்பட்டிருக்கும் மூளையில்லா இராகவன் மண்டையில் அவை நுழையவில்லை. பிறகு கத்தோலிக் மதத்திலிருந்து தள்ளப்பட்ட 27 வருஷங்களுக்குப் பின் 1885ம் வருஷத்தில், "ரோமான் சபையின் 50 வருஷமென்னும் தலைப்பெயர்கொண்ட ஒரு புத்தகமும் அதன்பின்" குருவும் பெண்ணும் பாவசங்கீர்த்தனமென்னும் ஒரு புத்தகமும் எழுதி, இதில் அபாண்டமும் ஆபாசமுமான கட்டுரைகளால் தூற்றும்படி வற்புறுத்திய தன் புரோட்டஸ்டாண்டு மதத்தாரை திர்ப்த்தி பண்ணினுன். இவை உண்மையா? 1861ம் வருஷம் கத்தோலிக்கருக்கு விரோதமாய் யாதும் கூறமுடியாதென்று எழுதியது உண்மையா? என ஜனசமூகமே யோசித்துக் கொள்ளட்டும். இந்த அபாண்டமும் ஆபாசமுமானவைகள்தான், நமது புத்திசாலியான இராகவனுக்கு பஞ்சாமிர்தமாகி, "குடி அரசில்" குருக்களும் பெண்களும் பாவசங்கீர்த்தனமுமென, புத்திக்கும் ஞாயத்திற்கும் ஒவ்வாத அபாண்டங்களை கெம்பீரமாய் எழுதிக்கொண்டு வருகிருர். நமது இராகவன் எழுவதுபோல் குருக்களும் பெண்களும் பாவசங்கீர்த்தனத்தால் கெட்டுப்போவார்களேயாகில் இக்கெடுதலை மூடிவைக்கவாவது மறைத்துவைக்கவாவது எத்தனை காலத்திற்கு இயலுமென்பதை சற்று நிதானிக்க வேண்டியது. ஏன் உலகத்தில் பகுதிக்குமேல் கொண்ட

பெருவாரிஜனத்துகையான கிறீஸ்துவக்கூட்டத்தில் இவை வெளிப்பட்டு போகாதிருக்குமா? இதை மேற்படி பெண்களின் தாய் தகப்பனே அண்ணன் தம்பியோ மற்றும் புருஷனே சகித்துக்கொண்டிருப்பார்களா? இவை கொலைக்கும் வழியாகாதா? என்று இராகவனே நீரே சற்று யோசித்துப்பாரும். இன்னும் பலவிதமான ஆபாசமானவைகளை கேட்கும் குருவானவருக்கு மனக்குழப்பம் ஏற்பட்டு, தவறிப் போகக்கூடுமென்று, செனிக்யூ எழுதியதைஒப்புக்கொண்டு மேற்படி இராகவன்எழுதுகிறார். இவைசரிஎன்கலாம்.ஆனால் யாருக்குச்சரி என்கலாம் நமது இராகவனை யொத்த பேர் வழிகளுக்குச் சரியென்கலாமே தவிர, கத்தலிக் குருப் பிரசாதிகளுக்கு சரியென்று ஒருபோதும் சொல்ல முடியாது. ஏனெனில் அவர்கள் சிறுபந்துவக்கி தத்துவ சாஸ்திரங்களை தீர்க்கமாய் கற்று தன்மனதை அடக்கவும் ஒடுக்கவும் தன்னை மேற்கொள்ளாதபடி கட்டுப்படுத்தவும் சுலபமாய் தெரிந்துகொண்டிருப்பதாலேயே, எவ்வித ஆபாசத்தோற்றத்தாலும் ஆசாபாச வலுவந்தத்தாலும் தவறிப்போகாதபடி தங்களை தற்காத்துக் கொள்ளுவார்களென்பது நிச்சயம். அதெப்படியெனில் ரெயில்வே இஞ்சினை நமது இராகவனை ஓட்டச்சொன்னால், ஓட்டுவாரா? ஓட்டமாட்டார்; ஏனென்றால் அதற்குள்ள சாஸ்திரங்களை படித்து தேர்ந்த ட்ரைவரானால், எத்தனையாவது நிமிஷத்தில் எந்த இடத்தில் நிறுத்தவேணுமோ, அதே இடத்தில் அதே நிமிஷத்தில் நிறுத்துவார். தோழர் இராகவனை ஓட்டும்படி இஞ்சினில் தூக்கி நிறுத்தி வைத்தாலோ, பிடித்து வைத்த பிள்ளையார் போல நிற்பார்; அல்லது ஓட்டினாலோ, ஒன்றுக்குப்பதிலாய் மற்றொன்றைத் திருப்பி வண்டி

ஓடாதும் அல்லது அதிக வேகமாய் ஓடியும் அல்லது ஒன்று ஒடிந்தும் கெட்டும் அதிமோசமேற்படுவதுமல்லாமல், குறித்த இடத்தில் நிற்க முடியாமலும், குறித்த நிமிஷம் தவறியும், அல்லகோலமாகிவிடும். அதுபோலவே, தங்களை நடத்திக்கொள்ள கத்தோலிக் குருக்கள் விமரிசையாய் அறிந்துகொண்டிருப்பதாலே, எவ்வித ஆசாபாச வலையில் மாட்டிக்கொள்ள மாட்டார்களென்பதை அறிந்துகொள்ளவேண்டியது. இன்னும் இக்குருப்பிரசாதிகளை கண்ணுங்கருத்துமாய்க் கவனித்துக்கொண்டிருக்கும் மேலதிகாரிகள் ஆசாபாசத்தாலமுக்கப்பட்ட செனிக்யூவிடம் தோற்றப்பட்ட மாதிரி ஏதாவது அற்ப சொற்ப ஜாடை காண்பார்களேயாகில், செனிக்யூவைப்போல உடனே வெளியேற்றி விடுவார்களென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது.

இன்னும் "ஜோன்" என்னும் பெயர் பூண்ட ஒரு பெண் ஆண் வேடந்தரித்து, எல்லோரையும் ஏமாத்திவிட்டு பிரதம குருவாகிய போப்புவின் சிம்மாசனத்தில், ஏறி தொப்பென்று உட்கார்ந்துகொண்டு போப்புவின் ஆதிக்கத்தை அடைந்து கொண்டாளாம். போப்புவிற்கு வணக்கம் செலுத்துகிற மாதிரி சகல அரசர்களும் பிரபுக்களும் நிபுணர்களும் மேதாவிகளும் அவளைப் பாதமுத்தி செய்து வணக்கஞ் செலுத்தினார்களாம் என்று நமது இராகவன் புளுகுகிறார். பேஷ் இவை எத்தனை விந்தை என்று ஜனசமூகமே யோசித்துப் பாருங்கள். ஒரு அரசாக்ஷியின் ஆதிக்கத்தை அடைந்துகொள்ள ஒரு பெண் கொண்ட சுலபமான சூக்ஷமத்தைக் கண்டுபிடித்து பிரஸ்தாபித்த நமது இராகவன் புத்தி சாதுர்யத்திற்கு பழுக்கக்

காய்ந்த இரும்பு கம்பியால் சன்மானஞ் செய்யாது விட்டு விடுவது, ஜனசமூகத்திற்குப் பெருமையாகாது. உலக ஜனத்துகையில் பேர் பகுதி கொண்ட கிறீஸ்த்துவர்களுக்கே பிரதம குருவாகிய போப்புவை, இத்தனை கேவலமாய் ஜனசமூகத்து மனதில் புகுத்தி மனமாற்றமடையச் செய்து கத்தோலிக் வேதத்தை விட்டு விடும்படி சூழ்ச்சி செய்கிறாராம். ஜனசமூகமே, இவர் புரட்டின் விசாலத்தையும், பித்தலாட்டத்தின் சாமார்த்தியத்தையும், இவர் சொல்லி வரும் ஒவ்வொரு பிரசாரக்கட்டுரைகளிலும், கண்டு கொள்ளலாம். இவ்வித பிரட்டுருட்டினுல் ஜனசமூகத்தை மனமாற்றஞ் செய்யவும் நாஸ்த்திகத்தையும், பொது உடமையையும், கிளர்ச்சியையும், புரட்சியையும், இந்தியாவில் பரப்பவும் பொருப்பேற்ற மேதாவிகளுக்கு சன்மானமாக, சென்ற வருஷத்தில் மட்டும் ரஷியா 50 லட்சம் ரூபாய் அனுப்பியிருப்பதாக பேப்பர் வாயிலாய் வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. இப்படி ஊர்ச் சொத்தைக் கொள்ளை கொள்ள கௌர்வமுள்ளவைகளை எல்லாம் அகௌர்வப் படுத்தி ஜனசமூகத்தை மனமாற்றஞ் செய்யத்திரிந்தலைபவர்களை படுபாதகர்களென்பது தவருகுமா.

இன்னும், அவள் திருட்டுத்தனமாய் பிள்ளையைப் பெற்று ரோட்டில் செத்துக்கிடந்தாளாம். அச்சமயம் நமது இராகவனும் அவர் சகாபாடிகளுஞ் சேர்ந்து அப்பிணத்தைத் தூக்கி புதைத்துவிட்டு அவ்வூர் முனிசிபாலிட்டியில் பிணந் தூக்கிய கூலி வாங்கப்போனூர்களாம். இதென்ன! அபாண்ட புளுகர்களாயிருக்கிறூர்களென்று மொத்து மொத்தென்று முகரையில் மொத்த வீக்கங்கொண்ட முகத்தோடு "உன்னுலே நான் கெட்டேன் என்னுலே நீ பட்

டாய்" என்று ஒருவரை ஒருவர் வசை கூறிக்கொண்டு ஓடி வந்து விட்டார்கள்போலும். இப்புதுமையைக் கூறிவருகிற இராகவனே கேளும், உம்மை போலொத்த புரட்டான கொள்கையையுடைய கத்தோலிக் மதவிரோதிகளால், 1300ம் வருஷத்தில் இக்கட்டுக் கதை கிளம்பினது. அக்காலத்திற்கு 450 வருடங்களுக்குமுன் அதாவது 855ம் வருஷத்தில் இக்கதை நடந்ததாக தூற்றப்பட்டது. அக்காலம் போப்புவாயிருந்த 4வது "லெயோ" 855 வருஷம் சூலை மீ 19ம் தேதி மரணமானுர். மூன்றுவது தினத்தில் 3வது பெனதிந்து, என்பவரை போப்பாக தெரிந்தெடுத்தார்கள். ஆனல் இத்தாலியா சக்கரவர்த்தியாகிய லோதியர் என்பவர் அனத்தாசியுஸ் என்பவரை போப்பாக நியமிக்கவேணுமாய் கட்சிபண்ணி, அவ்வரசர் 855ம் வருஷம் செப்டம்பர் மாதம் 28ம் தேதி இறந்துபோனுர். 29ந் தேதி 3வது பெனதிந்துவுக்கு பட்டம் சூட்டப்பட்டு சிம்மாசனமேறினுர். இச்சம்பவம் குருக்களுக்கும் அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் நிபுணர்களுக்கும் உலகமுள்ள பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கும் பகிரங்கமாய் தெரிய, தகரூர்ப்பட்டுக் கிடந்த இச்சந்தியில் மாறுவேஷந்தரித்த "ஜோன்" என்னும் பெண் போப்புப் பட்டத்தை வகித்ததாக, எப்படி எழுதினுயென்று எல்லோராலும் காறி துப்பப்பட்டு கிடக்கும் பகிரங்க விஷயத்தை, இராகவனே, நீர் தூற்றவந்ததைக்கொண்டு உம்மண்டையில் மூளை இல்லை என்றே நன்கு விளங்குகிறது. இவ்வித மூளை இல்லாக்காரணமே கத்தலிக் குருக்களையும் போப்புவையும் கன்னியர்களையும் தூற்றி வருகிறீர் என நன்கு விளங்குகிறது. பிரதம குருவாகிய

போப்புவைத் தெரிந்தெடுக்கவேண்டிய ஒழுங்குகளைச் சொல்லிக் காட்டுவோமாகில் அத்தனையும்கொள்ள, நமது இராவகன் மண்டையில் இடம் போதாதாகையால், அவர் புத்தி தெளியும்படி சில இங்கெடுத்துக் காட்டுவோம். அவ்வுன்னத ஸ்தானத்தில் அமரக்கூடியவர்கள், நல்ல தாய் தகப்பன் வயற்றிலுதித்து, சிறுபமுதல் தெய்வ பக்தியுள்ளவராகவும், குருப்பட்டம்பெற்று மேற்றிருசனஸ்தானத்தையும் கர்தினல் ஸ்தானத்தையும் வகித்து பல சாஸ்திரங்களைக் கற்றறிந்த பாண்டித்திய முள்ளவராகவும், பல பாஷைகளைப் படித்தவராகவும், புத்தி சாதுர்ய சாமார்த்தியமுள்ளவராகவும், அரசர்களாலும் பிரபுக்களாலும் நிபுணர்களாலும் கொண்டாடக்கூடிய மகுத்துவமுள்ளவராகவும், தயை ஈவு இரக்கமுள்ளவராகவும், தெரிந்து எடுக்கப்பட்ட ஒருவருக்கு பல அரசர்களும் பிரபுக்களும் நிபுணர்களும் மேதாவிகளும் புடை சூழ போப்பென்னும் பட்டம் சூட்டி அவ்வுன்னத சிம்மாசனமேறவேண்டிய திடுக்கிடக்கூடிய வைபவத்தில் கேவலம் முன்பின் அறியாத ஒரு பெண் ஆண் வேடந்தரித்து திடீரென ஓடிவந்து சுயேச்சையாய் அச்சிம்மாசன மேறிக்கொண்டாளென்று சொல்லுபவர்களை மூளை இல்லாத மண்டையுடையவர்களென்றே சொல்லவேணும்.

இன்னும் சில நாளாய் குடி அரசில் கன்னியாஸ்திரியின் காதல் கடிதமென்று போக்கிரித்தனமாய் எழுதப்பட்டு வந்தது. இதைக்கொண்டாவது, சுயமரியாதைக்காரரின் பித்தலாட்டத்தை ஜனசமூகம் அறிந்துகொள்ள வேண்டியது. மிக்கேலாள் தாய் தமயனுடன் குடும்பத்திலிருக்கும்போது, காதல் கடிதம் எழுதினளா? கன்னியாஸ்திரியானபின் கடிதமெழுதினளா? என்பதை ஜனசமூகம் மிக்க யோசித்துப் பார்க்கவேண்டியது. மிக்கே

லாள் கன்னியாஸ்திரியாகுமுன் எழுதிய கடிதத்தை, கன்னியாஸ்திரியின் காதல் கடிதமென்று பித்தலாட்டமாய் எழுதுவது போக்கிரித்தனமல்லவா? காமப்பித்துக் கொண்ட பாண்டியாவின் சூழ்ச்சியாலேயே, தூதுசென்ற ஒரு லாசரம்மாளால், நீளத்தில் பாகாய் கரைத்ததினுல் ஏய்க்கப்பட்ட பேதமை மெக்கேலாள், பாண்டியாவை மணந்துகொள்வதாக வற்புறுத்தலின்மீது கடிதமெழுதினுளா, அல்லது சுயமாய் இவளுக்கு காதல் ஏற்பட்டு எழுதினுளா, என்பதை இராகவனே, நீரே சற்று யோசித்துப்பாரும். இராகவனே, பாண்டியாவை மணந்துகொள்ள இவளுக்கு மெய்யாகவே மனதிருந்திருந்தாலும், அதை மாற்றிக்கொள்ள இவளுக்கு சுதந்தரமில்லையா? இச்சுதந்தரத்தை ஒருபக்கம் லகளே செய்வதும், ஒருபக்கம் பெண்களுக்கு சுதந்தரம் கொடுக்கவேணுமாய் ஓலமிடுவதும் தக்கடித்தனமல்லவா? இவ்விதமே குடி அரசும், சுயமரியாதைப் பிரசாரமும், சமயத்திற்கு தக்கவாறு வேஷம் போட்டு பொய்யும் புளுகளையும் நிறைத்து தக்கடித்தனஞ் செய்துவருகிறதென்பது வெட்டவெளியாகி விட்டதல்லவா? நீங்கள் ரஷியாவின் சன்மானத்திற்காகவே ரஷியாவின் தூண்டுதலின்பேரில், குழப்பத்திற்கு ஆஸ்பதமாக சமயத்திற்குத் தக்கவாறு தக்கடித்தனமாய் புரளிபண்ணி ஏய்த்துவருகிறீர்களென்பதை இன்னும் சில பாமரஜனங்கள் கண்டுபிடியாதிருப்பதே உங்கள் குறுகிய முன்னேக்குக்கு இடங்கொடுத்து வருகிறதல்லவா?

இன்னும் சுயமரியாதைபிரசாரங்களும் அதைச்சார்ந்த பத்திரிகைகளும் சில நாளாக ரோமான் கத்தோலிக் வேதத்தையும் அதன் தலைவர்களையும் விசேஷமாய் உலக சிரேஷ்டராகிய போப்புவையும் ஆவலாதிசெய்து விஷம்பத்தனமான பிரச்சாரங்கள் செய்துகொண்டு வருகின்றன. இப்பிரசாரங்

கள் விஷம்பத்தனமாகவும் ஆபாசமானதாகவும் துற்சிந்தனையுடையதாகவும் அவதூறாகவுமிருக்கின்றன. இப்பிரச்சாரங்கள் இ. பி. கோ. 153வது செக்ஷன்படி ஆக்ஷேபகரமானவை.

இவ்விஷயம் உலகமனைத்துமுள்ள ஜனத்தொகையில் பெரும்பாலோராகிய கிறீஸ்துவர்களுக்கு, மனக்கொதிப்பை உண்டுபண்ணுகிறது. இது அமைதிக்கு முறண்பட்டதாகவே யிருக்கிறது. சுயமரியாதைப் பிரசாரங்கள் இந்தியாவிலுள்ள சர்வ மதங்களையும் அழித்து ரஷியா சிகப்புக் கொடியை ஸ்தாபிதஞ்செய்யும் சூழ்ச்சியாகவே, காணப்படுகிறது. இதைப்பற்றி இந்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் இன்னும் இதில் கவனஞ்செலுத்தி தீர்க்கமான நடபடி எடுத்துக்கொள்வார்களென்றும் நம்புகிறோம்.

## கர்ப்பத்தடை

கர்ப்பத்தடை என்பதின் பளு இன்னதென உணர்ந்து கொள்ளாததின் தன்மையே சுலபமாகக் கருதப்பட்டு வருகிறது. கொலை செய்வதற்கும் கர்ப்பத்தடை செய்வதற்கும் வித்தியாசமே இல்லை. கொலை ஜீவனை அழிக்கிறது, கர்ப்பம் ஜீவனை உதிப்பிக்கிறது. உதிப்பிக்கும் ஜீவனுக்கு ஆதாரமாகிய கர்ப்பத்தை தடுக்கும்போது கொலையாகிறது. ஜீவன் சம்மந்தப்படுமுன், தடுக்கப்படும் கர்ப்பம் கொலையாகாதெனக் கருதுவாருமுளர். அங்ஙனம் கருதுவது தவறு. எப்படியெனில், ஒருவன் ஒருவனை கொல்லவேணுமென்னும் கருத்தோடு சுடுகிறான். சுடப்பட்டவன் ஜீவன் பிரிந்து போகிறது. நீதி விசாரணை செய்யப்பட்டு, சுட்டவன் கொலையாளியாகத் தீர்க்கப்பட்டு, கொலையுண்ணப்படுகிறான். இன்னொருவன், ஒரு பட்சியைச் சுடுகிறான்.

மறைவிடமாயிருந்த ஒருவன்மேல் பட்டு, அவன் ஜீவனும் பிரிந்துபோகிறது. இவனும் நீதி விசாரணை செய்யப் பட்டு, கொலையாளி அல்லவெனத் தீர்க்கப்பட்டு, விடுதலை செய்யப்படுகிறான். இவ்வகையில் கொலைக்கு காரணமா யிருப்பது எது, ஜீவனா, மனதா? அதுபோலவே மக்கள் இந்திரியத்தினால் ஜீவன் உண்டாகிறதென நன்றாய் தெரிந் திருந்தும், ஜீவன் உண்டாகக்கூடாதென்னும் எண்ணத் தோடு, மனப்பூரணமாய் அவ்விந்திரியத்திலுள்ள ஜீவக் கிரிமிகளை அவுழ்த மூலமாய் கொன்றும் அல்லது அவ்விரண் டும் சந்திக்க வொட்டாமல் தடுக்கும்போதும் கொலை என்றே கருதவேணுமென்பது, என்னுடைய திண்ணமான அபிப்பிராயமாகும். இன்னம் எந்த நோக்கத்திற்காக, இத் தடையை ஏற்படுத்த காரணம் ஏற்பட்டதோ, அதே நோக்கத்தை நிவர்த்திக்கக்காரணம் அனந்தமிருப்பினும், ஒருவகை பரிகாரத்தை, பிரான்சு தேசம் முன் மாதிரியாகக் காட்டியிருந்தும், முறையான வழியில், பரிகாரந்தேடாது, இயற்கைக்கு மாறான நோக்கமென நன்கு தெரிந்திருந்தும் உதிப்பிக்கிற ஜீவனை உதிப்பிக்காது தடுப்பதால், கொலை என்னும் என் அபிப்பிராயப்படி சென்னை லோயோலா கல் லூரி எக்னமிக்ஸ் பிரதம பண்டிதர் சங். எப். பாஸ்னக் சுவாமி அவர்கள் விக்டோரியா பப்ளிக் ஹாலில் செய்த உபந்யாசத்தில் கொலையும் தற்கொலையுமாகுமென்றே முடிக்கிறார். ஆனதால் கர்ப்பத்தடையை பக்காகொலை என் பது மறுக்கமுடியாத ஞாயமாகும். இவ்விதமே புத்திர சந்தானம் உண்டாகக்கூடாதென்னும் கருத்துடன் "ஓனான்" என்பவன் மனைவியைச் சேரும்போது தன் இந் திரியத்தை தரையில் விழவிட்ட தப்பிதத்திற்காக அவன் செய்தது மகா அக்கிரமமென்று கடவுள் அவனை அழித்

துப் போட்டார். (ஆதி. 38. அ. 9. 10. வ.) இதுபோலவே இந்து மதமும் இஸ்லாமியா மதமும் வேண்டிய ஆதாரங்களை எடுத்துக்காட்டி மத சம்பந்தங்களுக்கு மாறுன கர்ப்பத்தடை கூடாதென வற்புறுத்தப்பட்டு வருகிறது. இக் கர்ப்பத்தடையை சட்டமாக்க வேணுமாய் 1930-ம் வருஷம் சட்டசபையில் கொண்டுவரப்பட்ட பிரரேபனை, அப்போது உபதலைவராயிருந்த வைத்திய மாதராலும், வைத்திய இலாக்கா மந்திரியாயிருந்த ஸ்ரீமான் முத்தய்யா முதலியாராலும் எதிர்க்கப்பட்டு, வாப்பஸ் வாங்கி கொள்ளப்பட்டது. பின்னர் அப்பிரசினை 1932-ம் வருஷம் ஸ்ரீமான் முனிசாமி நாயுடு அவர்கள் பிரதம மந்திரியாயிருந்த காலத்தில் கொண்டுவரப்பட்டு தள்ளப்பட்டிருக்கிறது. தற்போது பிரதம மந்திரியாகிய பொப்லி ராஜா அவர்கள் கர்ப்பத்தடை பிரசினையை ஆதரிப்பது விந்தையிலும் விந்தையே. மேலும் மத சம்பந்தமான விஷயங்களில் பிரிட்டிஷார் பிரவேசிப்பதில்லை என கொடுத்த வாக்குத்தத்தத்தை பொப்லி ராஜா அவர்கள் மறந்துபோனது அதிலும் மிகவிந்தையே.

சமீபத்திலெடுத்த ஜனசங்கியில் இந்துக்கள் விருத்தி 100-க்கு 10 விகிதமும், மகமதியர் விருத்தி 100-க்கு 17 விகிதமும், கிறீஸ்துவர்கள் விருத்தி 100-க்கு 32 விகிதமுமாயிருப்பதால், மகமதியர் கிறீஸ்துவர்களின் அதிக விருத்தியின் பேரில் பொறாமைப்பட்டோ, அல்லது இந்தியர் ஜனசங்கி கோடிக்கணக்காய் பெருகி வருவதால் பிறக்கும் குழந்தைகளை ஆதரிக்கும் கஷ்ட வறுமையை முன்னிட்டோர் எனக்கூறினும், இவ்விரு அபிப்பிராயங்களும் நியாயத்திற்கு முரண்பட்டதெனவே கொள்ளவேண்டும். கர்ப்பத்திற்கு, பொறாமையையும் வறுமையையும் முட்டுக்

கட்டையாகக் கொள்வது ஞாயமாகுமா? கஷ்ட திசையை யுடைய 35 லட்சம் தகப்பன்மார்கள் பிரான்சுதேசத்தில் பிள்ளைப்படி வாங்கிவருவதுபோல, கர்ப்பத்தடை சட்டத்திற்கு பதிலாய், பிள்ளைப்படி சட்டத்தை ஏற்படுத்துவது பெருமையல்லவா? கர்ப்பத்தடையால் பிறப்புத்துகை குறைந்து, மரணத்துகை மலிந்து, ஜனத்துகை குறைந்து போனல், இத்தாலி முசிலோனியைப்போல் கலியாணஞ் செய்து வைத்து, பரீசும் கொடுத்து பேருகாலத்தை எதிர் பார்த்துக்கொண்டிருப்பது சிறந்ததாகுமா? ஜனபலுக்கம் அரசாங்கத்திற்கும் தேசத்திற்கும் உபபலமல்லவா? முன்யோசனை யின்றி செய்வது பின் ஆபத்தாகுமென்பதை ஜனசமூகமும் சர்க்காரும் கவனிக்கவேண்டியது.

இன்னும் கர்ப்பத்தடை சட்டமானது சில நாட்களுக்கு முன் கர்ப்பத்தைக் கெடுக்கும் வேசிகளின் கதவுகளை அடைத்த கையினுலேயே, மறுபக்கம் கர்ப்பத்தைக் கெடுக்க ஏராளமான கதவுகளை திறந்துவிடுவதாகும். ஸ்திரி புருட சேர்க்கையானது மானிடவர்க்கத்தை விருத்தி செய்வதற்கு கடவுளால் அமைக்கப்பட்ட ஓர் கருமமாகும். அக்கருமத்தாலுண்டாகும் பயன் நிறைவேறு வண்ணம் தடை செய்வானுகில், இயல்புக்கு விரோதமாய் நடக்கிறுனென்பது தவறுகாது. இவை பகுத்தறிவின் உணர்ச்சிக்கும் புத்தி சாதுர்யத் தன்மைக்கும் முறண்பட்டதாகவே இருக்கின்றன. பேருகால சமயத்து தாய்க்குள்ள கஷ்டத்தாலோ, அல்லது குடும்பத்திற்குரித்தான இடுக்கண்களாலோ, இன்னும் எத்தகைய கனமான காரணங்களாலோ என்கிலும் இயற்கையை மறிப்பது தன் மேன்மைத் தன்மையை இழந்ததாகவே பலராலும் மதிக்கப்

படும். இன்னும் இவ்வழிபாடு இயல்பாயுள்ள புணர்க் கைக்குமேல் மிதமிஞ்சி போக தூண்டுதல்செய்து, அதனல் பிணி மூப்பு சாக்காடு முதலிய அலங்கோலேகளுக்கும் காரணமாயிருத்தலின் நிமித்தமே நிந்தனைக்கும் இடமாகும். 1931 வருடத்திய ஜனசங்கி கணக்குப்படி இந்தியாவைவிட தென் அமேரிக்கா, சீனு, மலேயா முதலிய நாடுகள் ஜனத் துகையில் அதிக விருத்திபெற்றிருந்தும் அந்நாட்டார் இம் மிலேச்ச செய்கையை கருதவே இல்லே. இத்தகைய ஆலோசனே மேல்நாட்டில் முதலாய் அறுபது வருடங்களுக்கு முன் இல்லே. முற்காலங்களில் இவ்வித ஆலோசனையை பரப்ப எவராயினும் முன்வருபவரேயர்கில், தகனம் பண்ணப்பட்டிருப்பரென்பதற்குச் சந்தேகமே இல்லே. இப்பால் கர்ப்பத்தடையைக் கைக்கொண்ட காரணமே, பிரான்சும் இங்கிலாந்தும் பழய நாகரீகங்களின் க்ஷீணிப்புக்கும் அனுபவசித்தத்தில் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கும் அத்தாட்சியாக இருக்கிறது. இன்னும் க்ரோஸ்வெனர் பெண்கள் ஆஸ்பத்திரியின் டாக்டர் ஆர். எ. கிப்பன்ஸ் அவர்களும், (R. A. Gibbons) கய்ஸ் ஆஸ்பத்திரி டாக்டர் ஹெக்டர் கமேரான் அவர்களும், (Hector Cameron) இராஜாங்க தர்ம ஆஸ்பத்திரி டாக்டர் மரியா ஸ்கார்லியப் அவர்களும், (Marie Scharlieb) சமாரியன் பெண்கள் தர்ம ஆஸ்பத்திரி டாக்டர் டி. ஜே. மாக்கான் அவர்களும், (T. J. Mecann) ஸர். ஏ. ரைஸ். ஆக்ஸ்லி அவர்களும், (Sir A. Rice Oxley) கய்ஸ் ஆஸ்பத்திரி பிரதம பிரசவ வைத்தியர் பெல்லிங்ஹாம் ஸ்மித் அவர்களும், (Bellingham Smith) லண்டன் பெண் வைத்திய கலாசாலே பண்டிதர் லூயிஸ் மக் இல்ராய் அவர்களும், (Louise McIlroy) யப். டப்ளியு. டெய்லர் அவர்களும், (F. W. Taylar) டாக்டர் ஹாலிடே சதர்லண்டு

அவர்களும், (Dr. Halliday Sutherland) கய்ஸ் ஆஸ்பத்திரி ஜந்துதேக தர்ம சாஸ்திர பண்டிதர் எம். எஸ். பெம்ரே அவர்களும், (M. S. Pembrey) டாக்டர் ஜான் புஜன் அவர்களும், (Dr. John Buchan) டாக்டர் எஸ். ஜி. மூர் அவர்களும் (S. G. Moore) ஆகிய சகலரும் கர்ப்பத்தடையை கண்டனம் செய்கின்றனர். மேலும் அரசாங்க ஔடத சங்கத்தின் பிரசவ பகுதியாரே கர்ப்பத்தடை செய்வது மிகவும் கெடுதலேவிளைவிக்கும் என்கிற தங்கள் அபிப்பிராயத்தை பரவச் செய்தல் வேண்டுமென சொல்வதாக செல்சிய பெண்கள் ஆஸ்பத்திரி பிரதம வைத்தியர் ஆர்தர் யி. கைல்ஸ் அவர்கள் (Dr. Arthur E. Giles) கூறுகின்றனர். இச்சாக்ஷிகளின் உண்மைக்கு அத்தாக்ஷியாக ஜெர்மனி, பிரான்சு முதலிய தேசங்கள் சிசுத்தடையைக் குறித்து தாங்கள் செய்திட்ட பிழையை உணர்ந்து வாடுகின்றனர். எத்தேசத்தில் இப்பழக்கம் பரவுகின்றதோ அத்தேசத்தில் சில வருடங்களுக்கெல்லாம் அதனால் ஏற்படும் பயனை கண்ணுற்று மக்கள் திகிலடைகின்றனர். சில மேல் நாடுகளிலும் அமேரிக்கா கனடா முதலிய தேசங்களிலும் உண்டான திகிலே இதற்கு அத்தாட்சியாகும். இத்தகைய திகில் இந்தியாவை பீடியாதிருக்க சகல பெரியாரும் முன் வருவாராக.

இன்னும் மனிதன் இவ்வுலகில் பெற்றுக்கொள்ளும் பாக்கியங்களிளெல்லாம் புத்திரபாக்கியமானது பெரிய பாக்கியமென பெரியார்களால் சொல்லப்பட்டு வருகிறது. இப்பாக்கியம் விசேஷித்த ஒரு சக்தியின் வாயிலாய் வருவதென கொள்ளப்பட்டு வருகிறது. எப்படியெனில், புத்திரபாக்கியத்திற்காக அனந்தம் பாடுபட்ட ஒருவருக்கு இக்கலம் சைபராகவே யிருக்கிறது. வேறொருவருக்கோ

வென்றால் வெகு சுலபமாக பெருகிக்கிடக்கிறது. இவ்விரு வகைக்கும் காரணமாயிருப்பது எது என யோசிக்குமிடத்து தனிப்பட்ட ஒரு சக்தியிருப்பதாகவே திண்ணப்படுகிறது. இவ்வித அபாரசக்தியின் ஒரு பாகத்தைக் கெடுக்க மனித சக்தி தாண்டவமாடுகிறது. இத்தனிப்பட்ட சக்தியின் இருவகைப்போக்கையும் எதிர்ப்பாராகில் வல்லமைபுருஷரென்றே மெச்சலாம். ஒருவகைபோக்கை எதிர்த்து மறு போக்கிற்கு புறங்காட்டி நிற்பது வெட்கக்கேடேயாகும். உலகவிருத்தியைக்கொண்ட அச்சக்தியின் முற்போக்கை சட்டசபைவாயிலாய் கட்டிவிட்டேனென்பது தவறு. உலகமனைத்தும் தாங்கிநிற்கும் அச்சக்தியின் வல்லபத்தைக் காணவேணுமானால், அச்சக்தியை எதிர்த்த தேசங்கள் தற்போது அடைந்திருக்கும் இடுக்கண் மூலமாயும் நாளுக்குநாள் விருத்தியாகிவரும் உலகமனைத்துமுள்ள ஜனசங்கி கணக்கின் வழியாகவும் உணரலாம். ஆனதால் கர்ப்பத்தடை என்பது தனிப்பட்ட ஒரு சக்தியோடு போர்புரிவதாக தோன்றுவதால், அவ்விதம்போர் தொடுத்த தேசங்கள் பட்டனுபவிக்கும் பாடுகளை உணர்ந்து அத்தகைய எதிர்ப்பை விட்டு விடுவாராக.

இன்னும் ஏழை மக்கள் கஷ்டத்தின்பேரில் பரிதாபப்படுவோராக, கர்ப்பத்தடையை கொண்டாட கருதும் தர்மராஜ்ஜியப் பிரபுக்களே, குடி முதலிய லாகிரி வஸ்துக்களிலும், காப்பி கிளப்பிலும், ட்ருமா, சினிமாவிலும், ஏழை மக்களால் விருதாவாக்கப்படும் கோடிக்கணக்கான பொருள்களை உன்னிப்பார்த்தீர்களா? அவ்விதம் விருதாவாகாத படி தடுத்தால், கஷ்டநிவர்த்திக்கு இப்பெருந்தொகை ஒன்றே போராதா என யோசித்துப்பாருங்கள். அறிவிலி

களால் விருதாச்சிலவுசெய்து தானே தன்னை கஷ்டப்படுத்திக் கொள்பவருக்கு இயற்கைக்கு மாறான கர்ப்பத் தடையை முட்டுக்கட்டையாகக் கொள்வது பொருத்தமாகுமா? இன்னும் விருதாவாய் கிடக்கும் விரிந்த பூமியை, விவசாயத்திற்கேற்ற ஜலவசதி செய்து கஷ்டப்படுவோரை குடியேற்றி வைக்க சட்டசபையிடமளிக்கக் கேட்பது நெறியாகாதா? இன்னும் தொல்லைப்படுவோர் தொழிலைக்கெடுத்த நெல் அரைக்கும் மில்லுகளும், சள்ளை என்ற நெசவு வேலை இல்லை என்ற யந்திரத்தை தொல்லையென்றொழித்துவிட்டு, அல்லல் படுவோரை ஆதரிக்கக்கூடாதா?

இன்னும் உலகத்திலுள்ள மனிதவர்க்கசங்கியையிட எத்தனை மடங்கு அதிகமான நகர்வன, ஊர்வன நடப்பன, பறப்பன, தவழ்வன, மற்றுமுள்ள ஜீவன்கள் வசித்துவருகிறதென யோசித்துப்பாருங்கள். இவைகள் விரைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியத்தில் சேர்க்கிறதுமில்லையே. அப்படியிருந்தும், மனிதனைவிட தாஷ்டிகமாயிருப்பதினாலேயே, பட்டினி கிடக்கிறதாகவாவது, கஷ்டப்படுகிறதாகவாவது சொல்லுவதற்கிடமில்லையே. இப்படியிருக்க பகுத்தறிவுள்ள மனிதன் விரைத்தும், அறுத்தும், களஞ்சியத்தில் சேர்த்தும், பட்டினி கிடப்பதாகவும் கஷ்டப்படுவதாகவும் பறைசாற்றுவது வெட்கத்திலும் வெட்கமல்லவா? சோம்பேறிகளும், நோயுற்றோரும், விருத்தாப்பியரும், ஆதரவற்றோருமே தரித்திரர்களாய், யாசகர்களாய்த் திரிகிறார்கள், அவர்கள் மடியை அல்லது ஸோள்ளுவை சோதித்தாலோ 2 அணா கஞ்சா, 1 அணா பீடிக்குக் குறையாமலிருக்கிறது. ஏனென்று கேட்டாலோ, சாமி, ஜீரணத்திற்காக வேண்டியிருக்கிறதென்கி

றார்கள். அவர்கள் வயிற்றை கவனித்தாலோ நெஞ்சிற்கு மேல் மூன்று விரல் உப்பலாகவேயிருக்கிறது. இடுப்பை தடவிப்பார்த்தாலோ கச்சைப்பையும் அதில் பவுனும் ரூபாயுமாக இருக்கிறது. செல்வங் கொழிக்கும் இந்தியாவென பேர்பெற்றோங்கிய நமது நாட்டின் அனுபவம் இப்படியிருக்க, குடிகாரரும் சூதாடியும் காப்பிக்கிளப்பைக் காக்கிறவரும், சினிமா பிரியருமாகிய அசடர்கள் விருதாச் செலவு செய்து பட்டினி கிடப்பதற்கு முட்டுக்கட்டையாக, மனுப்பலி கொடுக்க, கர்ப்பத்தடையை கருதுவது நியாயமாகுமா?

இன்னும் கஷ்டப்படுவோரின் நிவர்த்திக்கு எத்தனை எத்தனை வழிபாடுகளிருப்பினும், குறுகிய நோக்கத்தோடு இயற்கைக்கு மாறான கர்ப்பத்தடையைக் கைக்கொள்ளக் கருதுவது மிகமிகத்தவறென்றே கொள்ளவேணும்.

## சுயமரியாதைக்காரரின் ஏய்ப்பு.

அர்த்தமற்ற சுயமரியாதைக் கூட்டத்தார், வானத்தை வில்லாய் வளைத்துவிடக்கூடியவர்கள்போலவும், காவேரியைக் கயிறாய்த் திரித்துவிடக்கூடியவர்கள் போலவும், சமுத்திர ஜலமெல்லாம் ஒரே விழுங்கில் விழுங்கிவிடக்கூடியவர்கள் போலவும் ரஷியாவைப்போல் உலகத்தையே புரட்டிவிடப் பார்க்கிறார்கள். இதற்கு உபபலமாக ஏழைமக்கள் ஆதரவை அடையவே உபாயங்கொண்டு, ஏழைமக்களை உன்னத பதவியில் உயர்த்திவைக்கப்போவதாக, ஏழைமக்கள் தொப்புள்வரை தித்திக்கும்படி ஏய்ப்புவார்த்தைகளைச் சொல்லி ஏழைமக்கள் இவர்கள் வாலைப் பிடித்துக்கொண்டே திரியும்படி சூழ்ச்சி செய்து வருகிறார்கள். ஊரார் பிள்ளையை கிணற்றில் தள்ளி ஆழம்

பார்ப்பதுபோல, ஏழைமக்களை ஏவிவிட்டு கிளர்ச்சியும் புரட்சியும் செய்யவேணுமென்பதே இவர்களின் தற்போதய நோக்கம். கிளர்ச்சியும் புரட்சியும் துணிந்து செய்வதற்காகவே, அத்துணிவிற்கு முட்டுக்கட்டையாயிருக்கும் பாவம், நரகம், என்பவற்றால், ததும்பி நிற்கும் அச்சத்தையும், அதற்கு ஆதிக்கமுடைய கடவுளையும், அறவே ஒழிக்க வருந்துகிறார்கள். இன்னும் இராஜ பற்றைக் களைந்தெறிய, அரசாங்கத்தையே குறை கூறி அத்தை ஒழித்து விடப்போவதுபோல, பகட்டி வருகிறார்கள். இப்பகட்டை நிலைநிறுத்துவதற்காகவே, உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க நிழலுமின்றி, பல்லாயிரமக்கள் தவிக்கவும், சிலர் சம்பிரமமாய் வாழவும், கடவுளும் அரசாங்கமும் ஆக்கிவைத்திருப்பதுபோல புளுகி, பாமர ஜனங்களை தத்தளிக்கச் செய்து விடுகிறார்கள். உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா என்னும் பெரியார் வாக்கியம் பகல்போலிருக்க, சமரசவாழ்விலும் பொருளாதாரத்திலும் மக்களை சமத்துவமாக்கிவிடப் போவதுபோலவும், அதனிமித்தம் மக்களுக்காக உற்பத்திசெய்யப்படும் பொருள்களில் சக்திக்கு தகுந்த வேலைசெய்து சாப்பாட்டுக்கு தகுந்ததை எடுத்துக்கொள்ளவேணுமாயும், ஒரு நூதனமுறையை ஸ்தாபிக்கப் போகிறார்களாம். அடுத்த வீடு வாழப்பொறுக்காத மனோபாபத்தையுடைய மக்கள், ஒருவர் பகல் பூரா 12 மணி நேரம் வேலைசெய்தும், ஒருவர் ஒருமணிநேரம் வேலைசெய்தும், இருவரும் ஒரே விதமாய் பலனடைந்து கொள்ளவேணுமென்பது நிலை நிற்குமா என யோசித்துப்பாருங்கள். இவ்வித சகிப்பு மக்களிடத்து நிலை நின்றுவிட்டால் "சாயுச்சிய" பதவியை அடைந்தாகி விட்டதே, இம்முறையை "நாய்க்கர்" நிலை நிறுத்துவதைவிட, அத்தைக்கி மீசை முளையவைத்து

சித்தப்பா என்று கூப்பிடுவதும், மக்கள் பறப்பதற்கு சிறகு முளைக்கச் செய்வதும் வெகு சுலபமே. காலாகால மாய் எத்தனை விலாசமான அறிவாளிகள், நடமுறைவாழ்க் கையை அனுசரித்து ஒழுகி வந்திருக்கிறார்கள், இவற்றை குறைகூறிமாற்றிவிடப்போகிறேனென்பது கபட சூழ்ச்சி யே. இவ்விதமே எழுதும் திறமையினாலும் சொல் வன்மை யினாலும் மக்களை மயக்கி சமத்துவ வாழ்வென்று ஏற் படுத்திய ரஷியாதேச "லெனின்" சம்பிரதாயம் சீர்கெட்டு, மக்கள் வாடுவது வெளிப்படையாயிருந்தும், ரஷியா சன் மானத்தில் பேராசைகொண்ட காரணமே, பாமரமக்களை ஏய்க்க சூழ்ச்சிசெய்து வருகிறார்கள். இவர்கள் சூழ்ச்சியை ஆய்ந்தறிய திறமையற்ற பாமரஜனங்களின் பிற்போக்கை கவனித்துவரும் பெரியார்கள் இக்கூட்டத்தாரை முற்றும் வெறுத்துத்தள்ளியே வருகிறார்கள். ஏனெனில், ஏழை மக்களை முன்னேற்றமடையச் செய்யவேணுமென்னும் நோக்கத்தோடு சீர்திருத்த மகாநாடு என்று கூட்டிய போது, முழுவீரத்தோடு இதற்கு ஆதரவளித்த பெரியார் கள், இப்போ பணப்பேய் பிடித்து ரஷியாவின் புரட்சிக் கோலத்திற்கு அடிமைப்பட்டு அக்கிரமமான கிளர்ச்சி செய் வதை பார்க்கப் பார்க்க, இவற்றை முற்றும் ஒழிக்கவே கங்கணம் கட்டிவிட்டார்கள். இதை அறிந்த பாமரமக் களும் விலகிக்கொள்வதைக்கண்டு, இவர்கள் இயக்கத்தை நன்கு மதிக்கும்பொருட்டு அடிக்கடி கூட்டம் போடுவதும், அதில் பெரியாரை தலைமை வகிக்கத்தழுவுவதும் அப்பெரி யார் பெயரை பேப்பர் வாயிலாய் பிரசுரிப்பதும் அப்பெரி யார் சிலர் இவ்வியக்கத்தை கண்டனஞ் செய்வதும், சிலர் அபிப்பிராயபேதங் காட்டி ஜாடையாய் சீர்குலைப்பதும், நடமுறையிலிருந்து வருகிறது. இதையும் உன்னிப்பாராத பாமரமக்களின் பேதமையை உணர்ந்தவர்கள், விஷப்

பாம்பை பிடிக்கப்போகும் குழந்தைப் பிள்ளையை, தந்தையும் தாயும் தடுத்து இரக்ஷிப்பதுபோல, துண்டுபிரசுரங்கள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் விவரித்துக் காட்டி சுயமரியாதை படுகுழியில் விழாவண்ணம் தடுத்து வருகிறார்கள்.

இன்னும் தற்போதைய அரசாக்ஷியை ஒழித்துவிட வேணுமாய் கூறுகிறார்கள். இப்பிரிட்டிஷ் அரசாக்ஷிக்கு முன் நடத்திவந்த இந்தியர் அரசாக்ஷிகளெல்லாம், யோக்கியமும் சவுகரியமுமான முறையில் நடந்து வந்திருப்பதாக, இதுவரை யாராவது பார்த்தும் கேட்டும் வாசித்துமிருக்கிறீர்களா? இற்றயவரை பிரிட்டிஷார் இந்தியாவிற்கு ஆயிரத்துச் சில்வானம் கோடிப்பொன் கடன் வாங்கிப்போட்டு, இந்தியாவை யோக்கியதையோடு நடத்திவருவதைக் கெடுத்து, பழய குருடி கதவைத் திறடி என ஓலமிடவா? பிரிட்டிஷாரால் இந்தியருக்கு சுய ஆட்சியாக கொடுக்கப்பட்டிருக்கிற முனிசிபல், டிஸ்ட்ரிக்டு போர்ட், தாலூக் போர்ட் முதலிய ஸ்தாபனங்களுக்கு, ஏராளமாக பண உதவி செய்தும், நடைபெறும் யோக்கியப்பொறுப்பு விளங்கவில்லையா? இன்னும் ரஷியாவின் குட்டிக்கரடிகளாகிய சுயமரியாதைக்கூட்டத்தார் சட்டசபையில் நிறைந்து, கிரமமற்ற கோட்பாடுகளைப் புகுத்தி, காலாகோலமாக்கிவிட மனப்பால் குடித்துக்கொண்டிருப்பதால், இந்தியர் ஆதிக்கத்திற்கு தயவோடு இடமளித்திருக்கும் பிரிட்டிஷார், இந்தியர் அட்டூளியமும் காலாகோலமும் செய்யத்துவக்கினால், சட்டசபையில் இந்தியருக்குள்ள ஆதிக்கத்தைப் பறிமுதல் செய்துவிட்டால், யானை தானே தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டதுபோல, உள்ளதும்

கெட்டுதடா நொள்ளைக்கண்ணு, என்று அறுதலிபோல, மூலையில் குந்தவேண்டியதாக முடியுமாதலால், சட்டசபை யில் நுழைந்து காலாகோலஞ் செய்ய கருத்துடைய சுய மரியாதையைச் சார்ந்தாருக்கு எப்போதும் ஓட்டுக்கொடா திருக்கவேண்டியது.

---

## முடிவுரை.

தற்சமயம் நாடுநகரமெங்கும் பலவகைப்பட்ட புரட் சிகளே நிலவிவருகின்றன. இப்புரட்சிமுறைகள், அரசி யல் அபிலாசைகளை பூர்த்தி செய்துகொள்ள குறுக்கான வழிகளென்று மேற்கொண்டு வருகின்றன. இப்புரட்சி முறைகள், நமது குடும்பம், சமூகம், மறுமை இவைகளுக்கு பெரும்பாதகத்தை உண்டுபண்ணுவதாக இருப்பதுடன், பொருளாதார முன்னேற்றத்திற்கு பாதகம் விளைந்து, பொருளாதார நெருக்கடியை கையும் மெய்யுமாய் கண்டு வருகிறோம். சக்திக்கு மேற்பட்டுள்ள பரந்த நோக்கமா னது, மிக தாழ்ந்த நிலைமைக்கே கொண்டுவருமென்பதின் முன் ஆராய்ச்சியற்ற குறைவே, இற்றய நெருக்கடியான நிலமைக்கு காரணமாகும். பிற்போக்கான புரட்சியினால் எவ்வித பயனும் இதுவரை ஏற்பட்டதாகவே இல்லை, ஏற் படும் என்னும் புலன் தோன்றவுமில்லை. காந்திப்பெரியார் ஆதியில் கொண்டுள்ள இயற்கையான சுதந்திரம் நியாய முறை என்கிலும், புரட்சியின் காரணமே தகர்ந்துபோய் விட்டது. 50 வருஷமாய் வேரூன்றி தளைத்து எழுந்து பெலன்பெற்ற காங்கிரசானது புரட்சியின் காரணமே,

மறைந்து கிடக்கிறது. இப்பால் வட்டமிட்டுவரும் தீண்டாமை என்னும் கிளர்ச்சி, நிலைக்கும் முறையிலில்லை. அறிவாளிகளின் தலைவரென புரட்சி செய்துவந்த நாயுடுவின் நிலமை இன்று சிறைவாசத்திலடங்கிக் கிடக்கிறது. இவ்விதமே புரட்சிகோலத்தின் முடிவு, ஜனசமூகத்திடை நெருக்கடியை உண்டுபண்ணி, அதன் தலைவர்களும் சின்னு பின்னமாகும் பலனே லபிக்கும் எனக்கொண்டு, ஏழைமக்களின் கஷ்டநிவர்த்திக்கு பரிகாரத்தை "கர்ப்பத்தடை" என்னும் தலையங்கத்தில், 55, 56, 57வது பக்கங்களிலும், தீண்டாமைஎன்னும் நோய்தீர அவுழ்தமுறையை...39வது பக்கத்திலும், எடுத்துக்கூறியுள்ளதை கவனித்து புரட்சி என்பவற்றைஅறவே ஒழிக்குமாறு வேண்டுகிறோம்.

இன்னும் புரட்சிக்காரராகிய சுயமரியாதைக்காரரின் தப்பறையான போதகத்தால் ஜனசமூக நிலமை நலிந்து போகாவண்ணம் அதைக் கண்டித்து, பரந்த நோக்கத்தோடு வரைந்துள்ள பெரியாரின் அறிய ஞானம் நியாயங்களுக்கிசைய, இத்தை அமைத்து தந்திருக்கிறோம்.

இதுவரை சொல்லிவந்திருப்பவைகளெல்லாம் விசேஷமாய் பகுத்தறிவென்னும் வெளிச்சத்தில் ஆய்ந்து ஆராய்ந்தறியப்பட வேண்டியவைகளாகவே யிருப்பதினால், இப்புஸ்தகத்திற்கு "ஆராய்ச்சி தீபம்" என்று பெயர் வழங்கியிருக்கிறோம்.

68அ14

ஆ. சவரிமுத்துப்பிள்ளை.

முற்றும்

R 3/4
N34